பக்கங்கள்-16 17,வைகாசி2020

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -298

# கோட்டாவின் குரங்கு பிடிக்குள் இலங்கை




# இனவாத ஊடகத்திற்கு சுமந்திரன் அளித்த பதில்கள் நேர்மையானது – இரா.சம்மந்தன்



## தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம்



# இனவாத ஊடகமும், இனவாத ஊடகவியலாளரும் சுமந்திரனிடம் கேட்கப்பட்ட இனவாத கேள்விகளால் ஏற்பட்ட சர்ச்சைகள்




கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஒரு பக்கம் இருக்க இனவாத கொரோனாவின் தாக்கம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த வாரம் முன்னாள் த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் மீது கொழும்பில் இயங்கி வருகின்ற குறித்த இனவாத ஊடகம் தனது இனவாதத்தினுடைய வெளிப்பாட்டை குறித்த ஊடவியலாளர் மூலம் நாடித்துடிப்பு இவ்வாறாகத் தான் இருக்கிறது தமிழ் மக்கள் மீது என்பது புலப்படுகிறது. அவ்வாறான கேள்விகள் தான் அன்று முன் வைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் தவிர்ந்த அறிக்கை விடுகின்ற ஆயுத கட்சிகள் ஈழ இராச்சியத்தை கோருவதற்கு தகுதியற்றவர்கள். காரணம் என்னவென்றால் ஈழ இராச்சியத்தை நோக்கி தமிழீழ விடுதலைப்புலிகள் போராடிய போது இராணுவ கைக்கூலிகள் மற்றும் இலங்கை அரசுடன் இணைந்து காட்டிக்கொடுத்த துரோகிகளே இவர்கள்.

குறிப்பாக பாராளுமன்ற நடை முறைகள் மற்றும் மாகாணசபை நடைமுறைகள் போன்றவற்றில் தங்களை உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் போது இந்த நாட்டிற்கு அரசியலமைப்புக்கு எதிராக செயற்படமாட்டோம் என்று சத்தியப்பிரமானம் செய்து கொண்டவர்கள் தான் இவர்கள். விடுதலைப்புலிகள் மட்டும் தான் தமிழீழ கோரிக்கையுடன் தமிழ் தேசியம் சுயநிர்ணயம் என்றும் வடகிழக்கு இணைந்தது தான் தமிழர் தாயகம் என்றும் போராடியவர்கள். கடைசி வீரன் வரை போராடியவர்கள். காட்டிக்கொடுப்புக்களும் கப்பங்களும் கொலைகளும் கொள்ளைகளும் யார் செய்தார்கள் என்று தெரியும். ஆயுத போராட்டம் பிழை என்று ஒதுங்கிக்கொண்ட அரசியல் கட்சிகளும் இந்த துரோகப் பட்டியலில் அடக்கப்படுகிறார்கள். மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் எல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகள் உடனேயே பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகுவதற்கு முன்னர் அனைத்து ஆயுத கட்சிகளையும் ஒன்றிணைந்து போராட வருமாறு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்திருந்த பொழுது டெலோ, பிளட், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகள் மறுத்துவிட்டார்கள். அதனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த ஆயுத கட்சிக்குள் ஊடுறுவி அவர்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தினார்கள். ஒருசாரார் இராணுவத்தோடும் மறுசாரார் விடுதலைப்புலிகளுடனும் இயங்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. ஈழ இராச்சிய கோரிக்கையை மறுத்து கைவிடாது தொடர்ந்தும் போரிட்டிருந்தால் இன்று தமிழீழம் வளர்ந்திருக்கும். போராட்டத்தினால் தமிழ் மக்கள் வெற்றி வெறும் அறிய வாய்ப்பினை காட்டிக்கொடுத்ததினாலேயே இந்த தமிழீழ கனவு கைகூடவில்லை. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மாவிலாற்றில் ஆரம்பிக்கப்பட்ட போர் முள்ளிவாய்க்காலோடு மௌனிக்கப்பட்டது. அந்த கட்டத்தில் கூட குறித்த ஆயுத கட்சிகள் இலங்கை அரசிற்காக போரிட முன்வரவில்லை. அதன் பொழுதும் இராணுவத்துடன் இணைந்து மினிப்பாம்களிலும் பல இராணுவ தடை முகாம்களிலும் ஒட்டுண்ணியாக இருந்து சரணடையும் விடுதலைப்புலிகளை காட்டிக்கொடுத்தார்கள். அதனால் முக்கிய தளபதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அதன் பின் நடைபெற்ற தேர்தலின் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களை கூட தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த. தே. கூட்டமைப்பில் கூட வேட்பாளர்களாக தெரிவு செய்யப்படவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளால் கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் குறித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினால் விலக்கப்பட்டார்கள். அதன் பின்னர் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் விடுதலைப்புலிகளின் மௌனிப்பின் பின்னர் தனக்கு ஏற்றாட் போல் அந்த கட்சியில் அரசியல்வாதிகளை நியமித்தார்.

அந்த காலகட்டத்தில் தான் திரு சுமந்திரன் அவர்கள் தேசியப்பட்டியல் ஊடாக த. தே.கூட்டமைப்பில் உள்நுழைந்தார். அப்பொழுது ஊடக பேச்சாளராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் படிப்படியாக ஊடகப்பேச்சாளர் பதிவியிலிருந்து விலக்கப்பட்டுக் கொண்டிருந்தார். பின்னர் சுமந்திரனின் உள் நடவடிக்கையினால் ஜெனீவா பேச்சுவார்த்தையில் விரிசல் ஏற்பட அதற்காக குரல் கொடுத்த சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் தலைமையை மீறி செயற்படுகிறார் என்ற காரணத்தால் கூட்டமைப்பு பேச்சாளர் பதவியிலிருந்து முதலாவதாக விலக்கப்பட்டார். பின்னர் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்தும் 2015 இல் நடைபெற்ற தேர்தலில் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார். ஆனாலும் சுரேஸ் பிரேமச்சந்திரன் த.தே கூட்டமைப்பின் ஊடக பேச்சாளராக இருந்த காலகட்டத்தில் ஊடக அறிக்கைகள் விடுகின்ற பொழுது நேர்காணல்களை சந்திக்கும் பொழுது மிக பொறுப்பு வாய்ந்தவராகவே பதிலளிப்பார். ஆனால் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தில் பிழையான பாதையில் பயணிக்கின்றது என்னும் பொழுது அதற்காக குரல் கொடுக்கப்போய் அதற்காக தேசிய பட்டியலை இழந்தது அனைவரும் அறிந்ததே. நிலைமை இவ்வாறிருக்க த.தே.கூட்டமைப்பில் நானே ராஜா நானே மந்திரி என்னும் மந்திரத்தை சுமந்திரன் கையில் எடுத்து செயற்பட்டார். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் திரு.சுமந்திரன் அவர்கள் முட்டுக்கட்டையாகவே இருந்து வந்தார். குறிப்பாக சொல்லப்போனால் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரம், பாராளுமன்ற விவகாரம், தமிழ் மக்கள் தொடர்பாக இழைக்கப்படும் அநீதி தொடர்பாக வாதாடி அதனை செயன்முறைப்படுத்துவதிலும் வீச்சாக செயற்பட்டதன் விளைவு தமிழ் தேசிய கூட்டமைப்போடு தற்பொழுது இயங்கி வருகின்ற அரசியல்வாதிகளுக்கும் இவரால் நெருக்கடி நிலைமைகளுக்குள்ளானார்கள். சுமந்திரனை எப்பொழுது, எந்த சந்தர்ப்பத்தில் வெளியேற்றலாம் என்பதே அனைவரதும் திட்டம். ஆனாலும் சுமந்திரனுடைய எதர்ச்சியான நடவடிக்கை ஒவ்வொன்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை பாதிக்கும் வகையில் இருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய ஒற்றுமையை சீர் குழைக்கும் ஒரு நபராக பார்க்கப்பட்டார். தொடர்ந்தும் இவ்வாறே பார்க்கப்பட்டு வந்த நிலையில் சிங்கள பேரினவாதிகளுடனும் அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் ரணிலுடன் இணைந்து செயற்பட்டதன் அடுத்தகட்ட விளைவு சுமந்திரனை சிங்கள தேச மக்களிடையே அரசியல் செய்வதையும் நிறுத்த வேண்டும் என்பதே ஆகும்.

அந்த அடிப்படையில் சுமந்திரனை ஒன்றில் சிங்கள மக்களிடம் இருந்து பிரிக்க வேண்டும் அல்லது தமிழ் மக்களிடம் இருந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டும். அதற்கானது தான் குறித்த நேர்காணல். ஏனைய கேள்விகளுக்கு மிக சாதூரியமாக பதிலளித்த சுமந்திரன் ஆயுத போராட்டம் பற்றிய கேள்விகளை மட்டும் கோட்டைவிட்டார். அதில் முக்கியமான கேள்வி என்னவென்றால் பிரபாகரனுடைய ஆயுத போராட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? அவரது பதில் இல்லை என்பதாகும். மற்றும் இந்த நாட்டின் கொடியை ஏற்றுக்கொள்கின்றீர்களா? ஆம் என்று பதிலளித்தார். நீங்கள் ஒரு இனவாதியா? இல்லை என்று பதிலளித்தார். ஒருமித்த நாடு என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா? ஆம் என்றும் பதிலளித்தார். ஆக இவர்களுடைய நோக்கமெல்லாம் ஏதோ ஒரு வகையில் இல்லை என்று பதில் கூறியிருந்தால் அவரை சிங்கள மக்கள் மத்தியில் இரு இனவாதியாக காண்பித்திருக்கலாம். அவ்வாறு காண்பிக்கப்படும் பொழுது மிக இலகுவாக சுமந்திரனை சிங்கள மக்கள் மத்தியில் ஒரு எதிரியாக ஒரு துரோகியாக சித்தரித்திருக்க முடியும். தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் அரசியலமைப்பா? என்று கேட்ட பொழுது இல்லை என்னும் பதிலை கூறினார். ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகளால் தான் உருவாக்கப்பட்டது என்று கட்சியின் தலைவர் சம்மந்தன் அவர்கள் கூறியிருந்தார். மற்றும் அனைத்து இனங்களும் ஒன்றாக வாழ விரும்புகிறீர்களா? ஆம் என்று பதில் கூறுகின்றார். உங்களது அரசியல் தலைவர் யார்? சம்மந்தன் என்று பதில் கூறுகின்றார். நாடு கடந்த தமிழக அரசோடு உங்களுக்கு தொடர்பு இருக்கிறதா? முன்பு இருந்தது தற்பொழுது இல்லை என்று கூறுகின்றார். நீங்கள் தனி நாடு பிரிவினை கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் நபரா? இல்லை என்கின்றார். த.தே.கூட்டமைப்பு சமஷ்டி கோருவது என்பது தனி நாட்டை பிரிப்பது தானே? அப்படியல்ல. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற பல நாடுகளில் இந்த சமஷ்டி இருக்கிறது. தேசிய கீதத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா?

ஆம் ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறினார். இதில் முக்கியமான கேள்வி நீங்கள் விடுதலைப்புலிகளின் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரின் அரசியலமைப்பை மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக்கொள்பவரா? ஏற்றுக்கொள்பவனல்ல என்று பதில் கூறுகின்றார். இதில் ஒரு விடயம் என்வென்றால் ஆயுத போராட்டத்தில் ஈடுபடாத ஒருவரோடு, போராட்டத்தின் வலி தெரியாத ஒருவருடன் இந்த நேர்காணல் இடம்பெற்றுள்ளது.

11ஆம் பக்கம் பார்க்க... –இரணியன்–

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

**ஒற்றை வார்த்தையால் மூடிமறைக்கப்பட்ட தமிழின படுகொலையே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை**

**மாவிலாறில் இருந்து ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் நிறைவடைந்தது. தமிழினத்தின் விடுதலைக்காக 30 வருடங்கள் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பென கூறி இலங்கை அரசு 57 நாடுகளின் உதவியோடு போரை முடிவிற்கு கொண்டு வந்தது. குறிப்பாக அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் தமிழினத்தின் மீதான இனப்படுகொலைக்கு உருதுணையாக செயற்பட்டன. அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி இரட்டை கோபுர தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டதன் பின்னர் 38 நாடுகள் பயங்கரவாத பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டது.**

**இப்பட்டியலில் இணைத்துகொள்வதற்கு சூத்திரதாரியாக செயற்பட்டவர் மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமன். இவர் தமிழீழ விடுதலைப்புலிகளினால் துரோகப்பட்டியலில் சுட்டுக்கொல்லப்பட்டார். தமிழின அழிப்பில் போராட்டத்தை காட்டிக்கொடுத்த 175 அரசியல் புத்திஜீவிகள் ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவ்வாறிருந்தும் தொடர் காட்டிக்கொடுப்புக்களின் நிமித்தம் இந்த போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. தேசியம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்களுக்கு வழுங்கக்கூடாது என்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சி செய்து வருகிறது. இந்தியாவை பகைத்துக்கொண்டு அரசியல் செய்ய முடியாத ஒரு சூழல் உருவாக்கப்பட்டது. ரஜீவ்காந்தியினுடைய கொலையே அதற்கு விளைவுகளை தோற்றுவிக்க காரணமாக இருந்தது. இந்திய இராணுவமும் இலங்கையில் இனப்படுகொலை ஒன்றை மேற்கொண்டது. அப்பாவி தமிழ் மக்கள் 1,500 க்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டார்கள்.**

**இந்தியாவின் மிகப்பெரிய பங்கோடு தான் அந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. 1 இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் முள்ளிவாய்க்காலில் மட்டும் கொலை செய்யப்பட்டார்கள். அதற்கான ஆதாரபூர்வமான புகைப்படங்கள் வீடியோக்கள் என்பன இருந்தும் இது வரையில் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தர அரசாங்கம் மறுக்கின்றது. சர்வதேச நாடுகளும் தமது போலி நாடகத்தை நடத்தி முடித்துள்ளது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் அமெரிக்கா சட்லைட் உதவியோடு ஆதாரபூர்வமான விடயங்களை சேமித்து வைத்துள்ளது. குறிப்பாக இந்த நாடுகள் அனைத்தும் தமது பூகோள அரசியலை கொண்டு செல்வதற்காக தமிழினத்தின் போராட்டம் தவறு என்று சித்தரிக்கின்றார். யுத்தம் முடிந்து 10 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படாமலே கடந்து செல்கிறது. முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களுக்கு ஒரு நினைவுத்துபி ஒன்றை அமைப்பதற்கு கூட அரசாங்கம் அனுமதிக்கவில்லை. ஆனால் இராணுவத்தினுடைய நினைவுத்தூபிகள் 14 க்கும் மேல் வட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுடைய மரணங்கள் தொடர்பில் இன்னும் அதிர்வலைகள் எழுப்பப்பட்டுக்கொண்டுள்ளன. சரணடைந்தவர்களும் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கொலை செய்யப்பட்டார்கள். இன்றைய நாளில் முள்ளிவாய்க்காலின் இனப்படுகொலை தமிழர் வரலாற்றில் மறக்க முடியாதது ஒன்று. வெகு விரைவில் தமிழ் மக்களுக்கான தீர்வினை அரசாங்கம் வழுங்க வேண்டும் இல்லாதுபோனால் முள்ளிவாய்க்கால் ஒரு முடிவாக அமையாது என்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.**

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



**105**

சுருங்கச் சொல்வதானால், மருந்துப் பொருட்களை எடுத்துக்கொள்ளும் போது, அப்பிரதேசத்தின் சிறப்பம்சங்களை அவசியம் கருத்திலெடுக்க வேண்டும். நச்சு விலங்குகள் உள்ள இடங்களில் ஊனீர் (விலங்குகளின் குருதியிலிருந்து தயாரிக்கப்படும் பிறபொருளெதிரி) பரிந்துரைக்கப்படுகின்றது. மருத்துவ உபகரணங்களின் அடுத்த பகுதி அறுவைச் சிகிச்சைக்கான கருவிகளாகும். இது தவிர முக்கியத்துவம் குறைந்த சமயங்களில் பயன்படுத்தப்படுவதற்கான தெரிவுசெய்யப்பட்ட சிறியளவு மருந்துப் பொருட்களும் உள்ளடக்கப்படுகின்றன. கெரில்லாவின் வாழ்வில் சுருட்டு முக்கிய பங்கு வகிக்கின்றது (சுருட்டு, வெண்சுருட்டு அல்லது சுங்கானுக்கென மெல்லியதாக நறுக்கப்பட்ட புகையிலை). சுருட்டு – சிப்பாயின் இணைபிரியாத தோழன். புகைபிடிக்கின்ற சகலருக்கும் மிகவும் பொருத்தமானது சுங்கான். இதன் பயனால் குறிப்பாக புகைபிடிக்கின்ற தருணங்களில் புகையிலை கூடுதலாக மிச்சப்படுத்தப்படுகின்றது. வெண்சுருட்டுத் துண்டுகளையும் சுருட்டு அடிக்கட்டைகளையும் கொண்டு சுங்கானில் புகைபிடிக்கலாம். தீப்பெட்டியையும் மறக்கக்கூடாது. தீக்குச்சுகள் சுருட்டுப் புகைப்பதற்கு மட்டுமன்றி மழைக்காலங்களில் மலைப்பிரதேசங்களில் நெருப்பை உண்டாக்க மிகக்கடினமாக இருக்கின்ற தீக்கணப்பு மூட்டுவதற்கும் வேண்டியனவாகும். தன்னுடன் தீப்பெட்டி அல்லது லைற்றர் (Lighter) வைத்திருப்பது மிகச் சிறந்ததாகும். லைற்றரில் எரிபொருள் தீரும் போது, தீப்பெட்டி அதனிடத்தை நிரப்புகின்றது. ஒவ்வொரு கெரில்லா வீரனிடமும் சவர்க்காரம் இருக்க வேண்டும். இது கழுவுவதற்கு மாத்திரமன்றி, பாத்திரங்களைச் சுத்தம் செய்யவும் அவசியமாகும். ஏனெனில் அசுத்தமான பாத்திரத்தைப் பயன்படுத்தும் போது அதனுள் எஞ்சியுள்ள புளிப்பதார்த்தங்கள் புதிய உணவுடன் கலக்கப்படுவதால், வயிற்றெரிச்சலும் குடல் நோய்களும் தோன்றுகின்றன.

மேலே குறிப்பிட்ட உபகரணங்கள் இருக்குமிடத்து கெரில்லாவால் மலைகளிலும் மிகவும் சாத்தியமற்ற சூழ்நிலைகளிலும் அவசியமான காலப்பொழுதில் நம்பிக்கையாக பாதுகாப்பாக வாழ முடியும். அத்துடன் சகல இன்னல்களையும் அவனால் சமாளிக்கவும் முடியும். சூழ்நிலைகளைப் பொறுத்து ஒரு சமயத்தில் சில வகை உபயோகப் பொருட்கள் முக்கியமானதாக இருக்கும் இன்னொரு சமயத்தில் – அவை தேவையற்ற சுமையாக இருக்கம். இதில் அடங்கும் பொருளாக, எடுத்துக்காட்டாக, திசைகாட்டியைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் ஏதாவதொரு பிரதேசத்தில் அகப்படும் போது பிரதேசத்தின் நிலையறிவதற்காகத் திசைகாட்டியின் உதவியை அடிக்கடி நாடவேண்டியிருக்கும். ஆனால் பிரதேசம் பழக்கப்பட்டதும் இதன் அவசியம் குறையத் தொடங்கிவிடும். மலைப்பிரதேசங்களில் திசைகாட்டியைப் பயன்படுத்துவது சிரமமாகும். ஏனெனில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்காக அங்கே நேர்ப்பாதையில் செல்ல முடியாது. இதற்கு பாதையில் கடந்து செல்ல முடியாத தடைகள் இருப்பதே காரணமாகும்.

மிகவும் பயனள்ள பொருள் – மழை நேரத்தில் உபகரணங்களை மூடுவதற்கானஉயர்தரத்தினாலான நைலோன் படங்காகும். குறித்த மாதங்களில் மழை கிட்டத்தட்ட ஓய்வின்றிப் பொழியும் என்பதைத் தெரிந்து கொண்டால் இதனைப் புரிந்துகொள்வது கடினமல்ல. இருந்த போதும் உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் காகிதாதிகளையும் ஈரலிப்புப் பழுதாக்கிவிடலாம். அத்துடன் ஆயுதத்தையும் ஆடைகளையும் சேதப்படுத்தியும் விடலாம்.

மாற்றுத் துணிகளை எடுத்துச்செல்வது பிரயோசன மாகும். ஆனால் புதியவர்களுக்கு இது தேவையற்ற சுமை போலத் தோற்றமளிக்கும். கூடுதலாக அவர்கள் தம்முடன் நீளக்காற்சட்டைகளை மாத்திரமே எடுத்துக்கொள்கின்றனர். வாழ்க்கை வளங்களைக் காப்பாற்றக் கெரில்லாவுக்குக் கற்றுக்கொடுக்கின்றது. அவன் எப்பொழுதும் முதுகில் சுமக்கின்ற பொருட்பையில் மிகவும் இன்றியமையாத பொருட்கள் மாத்திரமே இருக்க வேண்டும். ஆகவே தான் கெரில்லா வழக்கமாக மாற்றுத் துணியின்றியும் அத்துடன் துவாலையின்றியும் சமாளித்துக்கொள்கின்றான்.

ஆடைகளைத் துவைப்பதற்கும் பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்கும் அத்துடன் தனிப்பட்ட பயன்பாட்டிற்கும் (குளிப்பதற்கும்) கெரில்லாவிற்கு சவர்க்காரம் அவசியமாகும். சவர்க்காரத்தை விடவும் தனிப்பட்ட பயன்பாட்டுப் பொருட்களாகத் தூரிகையும், பற்பசையும் விளங்குகின்றன. புத்தகங்களைப் பற்றியும் மறக்க வேண்டாம்.

இதனைக் கெரில்லாக்கள் வரிசைக்கிரமத்தில்ஒவ்வொருவரும் வாசிக்கலாம். முன்னைக்கால வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய புத்தகங்கள், வரலாற்று நூல்கள், அந்நாட்டின் பொருளாதார வரைபடவியல் சம்பந்தமான புத்தகங்களாக இருப்பதே விரும்பத்தக்கது. இவை வெவ்வேறு வகையான பிறபடைப்புக்களாகவும் இருக்கலாம். அவை வீரர்களின் பண்பாட்டுத் தரத்தை உயர்த்த உதவுவனவாக இருக்க வேண்டும். அத்துடன் இவை அசட்டுத்துணிவு விளையாட்டு களியாட்டங்களிலிருந்தும் ஏனைய தகுதியற்ற உல்லாசங்களிலிருந்தும் படிப்படியாக விலகிக்கொள்ள உதவுவனவாகவும்,ருக்கவேண்டும்.

ஏனெனில் கெரில்லா விடம் கூடுதலான சந்தர்ப்பங்களில் மிக அதிகமான ஓய்வு நேரம் இருக்கின்றது. உணவுப் பொருட்களை எடுத்துச்செல்லக் கடினமான இடங்களில் மாத்திரம் கெரில்லா இருப்பானானால் கெரில்லாவின் பொருட்பையில் வெற்றிடம் இருக்கின்ற ஒவ்வொரு தடவையும் அதனை உணவுப்பொருட்களால் நிரப்புவது அவசியமாகும். அவன் இனிப்புப் பொருட்களையும் ஏனைய முக்கியத்துவம் குறைந்த உணவுப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச்செல்லலாம். அவ்வாறானவை எடுத்துக்காட்டாக உலர்ந்த விசுக்கோத்து, இது கூடுதலான இடத்தைப் பிடித்தாலும் நொருங்கினாலும் தூள்வடிவிற்கு வந்துவிடும். நகரக்கடினமான உயர்ந்த வளரிகளைக் கொண்ட புதர்க்காட்டினூடாக அரிவாள் இல்லாமல் நகர்வது கடினமாகும். ஈரலிப்பான பிரதேசத்திற்கு செல்லும் போது மண்ணெண்ணெய்ப் போத்தலொன்றையும் எடுத்துக்கொள்வது அவசியமாகும். மண்ணெண்ணெய் இல்லாவிட்டால் கிசில் இனத்தைச் சேர்ந்த மரங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தேவதாரு மரம் இதனது உதவியுடன் காய்ந்த சிறுகிளைகள் இல்லாமலுங்கூட வேகமாகத் தீயை வளர்த்துக்கொள்ளலாம்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட முன்னாள், இன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம் பின்வருமாறு

ஆர். சம்மந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன், என். ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம், என். சிவசக்தி ஆனந்தன், கே. துறைராஜசிங்கம், எஸ். கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், கே. சிவநேசன், கே. கனகரட்ணம், எஸ். கிசோர், எஸ். நோதராதலிங்கம், டி. கனகசபை, கே. தங்கேஸ்வரி, கே. இராசநாயகம், எஸ். ஜெயானந்த மூர்த்தி, கே. பத்மநாதன் ஆகியோர் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட பின்னரே தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளாத ஒரே இயக்கம் பிளட், கட்சி தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு ஆனந்த சங்கரி, ஈ.பி.டி.பி இன் டக்ளஸ் தேவானந்தா. இவ்வாறு இருக்க திரு சுமந்திரன் அவர்களுடைய கருத்தின்படி தான் வன்முறையை விரும்பாதவன் என்றும் விடுதலைப்புலிகளினுடைய ஆயுத போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற தோரணையில் குறித்த சிங்கள இனவாத ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலின் பொழுது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தற்பொழுது சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.




ஆனாலும் இதிலுள்ள முக்கிய விடயம் என்னவென்றால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்தையே நான் எப்பொழுதும் கூறுவேன். நான் கூறும் கருத்துக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்துக்களாகவே இருக்கும் என்று கூறிய சுமந்திரன் அவர்கள் சிங்கள இனவாத ஊடகத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் அப்படியாக இருந்தால் தற்பொழுது இருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்தையும் உள்வாங்கித்தான் இந்த கருத்தை அளித்தாரா? ஒரு கருத்து பிழையாக வரும் பொழுது அதை கட்சியினுடைய கருத்தல்ல என்றும் தனிப்பட்ட கருத்து என்றும் கூறி நழுவுகின்ற போக்கை அரசியல்வாதிகள் ஒரு தந்திரமாக பயன்படுத்தி தப்பித்துக்கொள்ள பார்க்கிறார்கள். உண்மையாக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு வன்முறையாளர்களால் உருவாக்கப்பட்ட கட்சி என்று அவருக்கு தெரிந்தும் அக் கட்சியில் தேசிய பட்டியலின் ஊடாக நுழைந்துவிட்டு அந்த கட்சியில் இருப்பவர்கள் பற்றி குறை கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. இப்படிப்பட்ட கொள்கைகளை இவ்வாறான அரசியல் தலைவர்கள் கொண்டிருப்பதன் காரணமாகவே கூட்டமைப்பு மென்மேலும் பிளவுபடுகிறது. அரசாங்கத்துடன் இணைந்து பிளவுபடுகின்ற நிலைமைக்கு இவர்கள் தள்ளுகிறார்கள்.

ஒரு கட்சியின் ஊடக பேச்சாளராக இருந்துகொண்டு அவ்வாறு தனிப்பட்ட கருத்து என்று ஒரு பொதுவெளியில் கூறுவது ஏற்றுக்கொள்ளப்படுவதல்ல. அரசியல்வாதிகளை பொறுத்தவரையில் காலத்திற்கு காலம் தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக பொய் உரைப்பது வழக்கம். ஆனால் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றை குழிதோண்டி புதைத்து தமது சந்தர்ப்பவாத அரசியலை செய்யக்கூடாது. கூட்டமைப்பில் உள்ளவர்கள் வன்முறையாளர்கள் என்றால் அதிலிருந்து ஒதுங்குவது தான் புத்தியுள்ளவர்களுக்கு அழகு. விடுதலைப் புலிகளினுடைய போராட்டம் இலங்கை அரசு மற்றும் உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை பெற்றுத்தரும் நோக்கில் செயற்பட்டார்கள். அதில் மாற்றுக்கருத்தில்லை. விடுதலைப்புலிகள் பலமான ஒரு ஆயுத இயக்கமாக இருந்த காலகட்டத்தில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகவும் அவர்கள் செயற்பட்டார்கள் இந்த விடயத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அதன் தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் நேரடியாக தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளை வைத்து தான் வாக்கு கேட்கவில்லை என்று சுமந்திரன் அவர்கள் கூறும் சந்தர்ப்பத்தை பார்க்கும் பொழுது கூட்டமைப்பு என்னும் ஒன்று அதில் ஆயுத வன்முறையாளர்கள் இருக்ககூடாது என்று கூற வருகிறார். இல்லாவிட்டால் ஆயுதம் தாங்கியவர்களுடன் தொடர்ந்தும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணிக்க முடியாது என்ற கருத்தையும் கூற வருகிறார்.

ஊடக பேச்சாளராக சுமந்திரன் அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்க தகுதியற்றவர் என்பதே எமது வாதம். கட்சியின் உள் விடயங்களை இரகசிய விடயங்களை ஒருபோதும் வெளியிடக்கூடாது. அவ்வாறு வெளியிடுபவர்கள் துரோகிகள். தமிழீழ விடுதலைப்புலிகளின் இறுதி யுத்தமே தமிழீழ விடுதலைப்புலிகளின் கடந்த 30 ஆண்டுகள் போராடிய யுத்தத்தின் வெற்றி சர்வதேச நாடுகள் திரும்பி பார்க்கும் நிலைமை உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகளை ஏன் சர்வதேசம் அழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தது என்பது திரு சுமந்திரன் அவர்களுக்கு தெரியும். ஈராக் ஜனாதிபதி சாதாக்முசைன், வடகொரிய அதிபர் ஜிங் ஜான் பலஸ்தீன திபியாவின் மொகமட்கடாபின் போன்றவர்களின் மீதும் அமெரிக்கா வீற்றோ பவர் கொண்ட நாடுகள் ஏன் அழித்தொழித்தன அல்லது ஏன் அழித்தொழிக்க முட்பட்டனர். இவர்கள் சர்வதேச நாடுகளுக்கு சிம்ம சொற்பனமாக விளங்கியதே ஆகும். விடுதலைப்புலிகளின் போராட்டம் ஒரு இனத்தின் விடுதலைக்கான போராட்டம். அந்த போராட்டத்தை துரோகத்தின்பால் முத்திரை குத்தி பார்ப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் இயங்கிய காலகட்டத்தில் அதனுடைய செயல் நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியை கொடுத்திருந்தது. வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகமே தமிழீழ விடுதலைப்புலிகளினுடையதும் தமிழ் தேசிய கூட்டமைப்பினுடையதும் இலக்காகவும் இருந்தது.

சுமந்திரன் தொடர்பாக இலங்கையில் பல்வேறு கட்சி மட்டங்களில் இருந்தும் எதிர்ப்புக்கள் எழுப்பப்பட்டதன் முக்கிய காரணம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான குற்றச்சாட்டை சுமத்தியதே. ஏனைய கட்சி மீது குற்றச்சாட்டை சுமத்தி இருந்தால் நிலைமை இவ்வாறு மோசமடைந்திருக்காது. ஆகவே மீண்டும் மீண்டும் விடுதலைப்புலிகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது என்பது அல்லது நான் வன்முறையாளர் அற்றவர் என்று நிரூபித்துக்காட்ட முனைவது சுமந்திரனின் உயிருக்கே ஆபத்தான நிலைமை உருவாகும். காரணம் சுமந்திரன் மீது அனைத்து போராட்ட கட்சிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஆத்திரத்தோடு இருக்கிறார்கள். இனித்தான் சுமந்திரனின் பாதுகாப்பையும் அதிகரிக்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை யார் உடைத்துக்கொடுத்தாலும் அரசாங்கம் அவர்களுக்கு வெகுமானங்களையும் சன்மானங்களையும் வழங்கும். இன்னுமொரு 10 ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் எச்சங்களே இந்த நாட்டில் இருக்க கூடாது என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு. டெலோ, பிளட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளையே அரசாங்கம் எப்பொழுதோ உள்வாங்கி விட்டது. விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அல்லது பயங்கரவாத பட்டியலிலே அவர்கள் இல்லை. தேர்தல் ஒன்று நெருங்கிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் இவ்வாறான கருத்துக்கள் பெரும் தாக்கத்தை ஏனைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செலுத்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.



1. R. Sampanthan
2. Mavai Senathirajah
3. Selvam Addaikalanathan
4. Gajendrakumar G. Ponnambalam
5. Suresh Premachandran
6. N. Raviraj
7. M. K. Sivajilingam
8. N. Sivasakthi Ananthan
9. K. Thurairatnasingham
10. S. Kajendren
11. Padmini Sithamparanathan
12. K. Sivanesan
13. S. Kanagaratnam
14. S. Kisshor
15. S. Noharathalingam
16. T. Kanagasabai
17. K. Thangeswari
18. K. Rasanayagam
19. S. Jeyanandamoorthy
20. K. Pathmanathan

ஈழப் புகழ் மாறன்

# ஊரடங்கு நீக்கமும் கொரோனா வைரசும்

கடந்த 2019 டிசம்பர் மாதம் தொடக்கம் உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரசால் 3 இலட்சம் மக்களுக்கு மேல் உயிரிழந்த நிலையில் சுமார் 47 இலட்சம் மக்களுக்கு மேல் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையை பொறுத்தவரையில் பெப்ரவரி இறுதி வாரத்தில் கொரோனா தொற்றாளர் கண்டறியப்பட்டார் அன்று தொடக்கம் இப்பத்தி எழுதும் வரை நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 960 ஆக உள்ள நிலையில்இறந்தவர்களின்எண்ணிக்கை 9 ஆக காணப்படுகின்றது. இந்நிலையில் இலங்கை கொரோனா வைரசின் தாக்கத்தில் இருந்து மக்களை பாதுகாக்க கடந்த 50 நாட்களாக நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது.


கொழும்பு கம்பகா தவிர ஏனைய 23 மாவட்டங்களின்ஊரடங்கு உத்தரவானது இரவு 8 மணி தொடக்கம் காலை 5 மணிவரை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கம்பகா மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவானது மறுஅறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதல் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு மாத காலமாக கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 240 பேராக இருந்த நிலையில் கடந்த குறுகிய நாட்களுக்குள் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து சுமார் 960 ஆக உயர்ந்தது. இதில் அதிகமான தொற்று கொழும்பு பிரதேசத்தின் வாழைத் தோட்டப்பகுதியில் இனங்காணப்பட்டது.

இதைவிட வெலிசறை கடற்படையினருக்கு அதிகமான தொற்று ஏற்பட்டதாக அறிய முடிகின்றது. அங்கு பணியாற்றும் கடற்சிப்பாய் ஒருவர் போதைப்பொருள் பாவனையாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டதால் இப்பொழுது சுமார் 400 க்கும் மேற்பட்ட கடற்படையினர் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊரடங்கு உத்தரவால் நாடு முற்றாக முடக்கப்பட்டதால் பொருளாதார நிலையில் மிகவும் வீழ்ச்சியடைந்த நிலையில் சமூக ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பொருளாதார நிலையில் உள்ள சரிவை நீக்க நாட்டில் அமுலில் உள்ள முடக்க நிலையை நீக்க அரசு முடிவு செய்து ஊரடங்கை தளர்த்தியுள்ளது. அத்துடன் வரும் பாராளுமன்ற தேர்தலை திட்டமிட்டபடி வைப்பதற்காகவும் ஊரடங்கை தளர்த்தியுள்ளதாக தெரியவருகின்றது.

அரசுக்கு முன்னால் உள்ள இரண்டு பெரிய பிரச்சனைகளில் ஒன்று திட்டமிட்டபடி தேர்தலை நடாத்துவது இரண்டாவது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பொருளாதார சரிவை மீட்டெடுப்பது இது இரண்டும் மிகப் பெரிய சவாலாக அரசுக்கு முன் உள்ளது. இதை எவ்வாறு சரிபன்னுவது என அரசு குழம்பிப்போயுள்ளது. உண்மையில் ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த மிக காத்திரமான முயற்சிகள் மேற்கொண்டார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இவ்வாறு அரசு எடுத்த துரித நடவடிக்கையில் உலகளாவில் கொரோனா உயிரிழப்பும் தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு. இந்நிலையில் சுகாதாரப் பிரிவும் இலங்கை புலனாய்வுப் பரிவும் உலக சுகாதாரப் பிரிவும் எச்சரிக்கை விடுத்தும் அரசு செவி கொடுக்காமல் நாட்டின் முடக்க நிலையை தளர்த்தியமை மிக மோசமான நிலைக்கு கொண்டு செல்லுமோ என்ற அச்சம் தற்பொழுது மக்கள் மனதில் எழுந்துள்ளது. ஊரடங்கு கடந்த 11 ஆம் திகதி நீக்கப்பட்டதன் பின்னர் மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல தரப்பினர் அறிவுறுத்தல்களையும் விழிப்புணர்வுகளையும் அறிவித்த பொழுதும் மக்கள் அதனை பின்பற்றவில்லை என பிரதி காவல்துறை அதிபர் அஜித் ரோகனா அவர்கள் விசனம் தெரிவித்ததுடன் ஊரடங்கு மீண்டும் அமுல்படுத்தப்படும் என எச்சரிக்கை செய்துள்ளார். ஊரடங்கு நீக்கத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் அவர்களும் யாழ் மாவட்ட அரச அதிபர் திரு மகேசன் அவர்களும் யாழ் மாவட்ட மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றி மிக தெளிவாக வெளிப்படுத்திய பொழுதிலும் அப்பகுதி மக்கள் அதனை பொருட்படுத்தியதாக தெரியவில்லை. இந் நிலையில் சில தினங்களுக்கு முன்னர் யாழ் மாவட்ட இராணுவ கட்டளை தளபதி கூறிய கருத்து அவரது மனக்குமுறலை அறிய முடிகின்றது. அது யாதெனில் யாழ் மாவட்ட மக்கள் அநாவசியமாக வெளியில் நடமாடுவதை தாம் விரும்பவில்லை என கூறியுள்ளார்.

இதே நேரம் ஊரடங்கு தளர்த்தப்படாத கொழும்பு கம்பகா போன்ற பிரதேசங்களில் ஊரடங்கு தளர்த்தப்படாத பொழுதிலும் அரச தனியார் சேவை வழமை போல் நடைபெற அரசு அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில் கடந்த நாட்களில் கொழும்பு பிரதேசத்தில் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் ஈடுபட்டதை காவல்துறையினர் கண்டித்துள்ளனர். அத்துடன் இது தொடர்பான கடும் இறுக்க நடவடிக்கையை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். பொதுபோக்குவரத்து சேவைகளில் மக்களை சுகாதார முறைகளை பின்பற்றாமல் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிய இலங்கை போக்குவரத்து சபை பேரூந்துகள் சுகாதாரப் பிரிவினரால் மறிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இந் நிலையில் மதுபானசாலைகள் திரையரங்குகள் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் அழகுக் கலையங்கள் என்பன மறுஅறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளன. மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் ஆங்காங்கே கசிப்பு உற்பத்திகள்மிகவேகமாகமுன்னெடுத்துச் செல்வதைகாணக்கூடியதாகஉள்ளதுடன் சமூக சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன. விமானப் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம் பெறுகின்றன. உண்மையில் பொருளாதார ரீதியாக வருமானத்தை ஈட்டும் பகுதியின் சுற்றுலாத்துறை ஏற்றுமதித்துறை மதுபானசாலைகளின் செயற்பாடுகள் முற்றாக முடங்கியுள்ளன. தேயிலை கோப்பி உட்பட பெருந்தோட்ட ஏற்றுமதிகளும் முடங்கியுள்ளன. அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கே அரசு தற்பொழுது தினறி வருகின்றது.

இவ்வாறான நிலையில் நாட்டை தொடர்ந்து முடக்கி வைப்பது மிகப்பெரிய பொருளாதார பின்னடைவை சந்திக்க வேண்டிவரும் என்பது உண்மையே. இந்நிலையில் ஊரடங்கை நீக்கி சமூக




நிலைக்க கொண்டு வர அரசு எடுத்துள்ள முயற்சியானது ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த பொழுதிலும் மறுபகுதியில் கொரோனாவின் தாக்கமானது அதன் வீரியத் தன்மை குயைவில்லை என சுகாதாரப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் கொரோனா வைரசானது இன்னும் சமூக பரவல் நிலைக்கு செல்லவில்லை என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இதில் சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இலங்கையை விட கொரோனா தொற்று பாதிப்பு அதிகமான நாடுகளை ஜேர்மன், பிரேசில், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் தங்கள் முடக்க நிலையை தளர்த்திய பொழுது அங்கு கொரோனாவின் தாக்கம் அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. கனடா நாட்டில்கல்விசார்துறைதொடங்கிய பின்னர் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டில் இருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றன. இதனைவிட சீனாவில் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர் உள்ள மாகாணமாகிய வுகான் மாகாணத்தில் முற்றாக கொரோனா தொற்று நீங்கி விட்டதாக ஊரடங்கை முற்றாக தளர்த்திய நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர்மீண்டும்கொரோனாதொற்றாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இன்று கொரோனாவின் தொற்றாளர் எண்ணிக்கையிலும் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கையிலும் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவில் இவ்வாறு முடக்க நிலை சரியான முறையில் பின்பற்றாததால் இந்நிலை தோன்றியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இவ்வாறு உலகம் முழுவதும் தளர்வு நிலையை ஏற்படுத்தும் பொழுது கொரோனாவின் தாக்கம் அதிகரித்து செல்லுகின்றது. இந்நிலையில் உலக நாடுகள் அனைத்தும் பொருளாதார நிலையில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு நாடுகளும் இவ்வாறான பொருளாதார சரிவில் இருந்து மீட்க முடக்க நிலையை தளர்த்த முயற்சிப்பது தெரிகின்றது. ஆனால் மறுபுறம் இவ்வாறு தளர்வுகள் ஏற்படும் பொழுது கொரோனா தொற்றும் உயிரிழப்புக்களும் அதிகரித்து செல்லும் என்பதை அவதானிக்க முடிகின்றது. உலகில் மிகவும் பொருளாதார நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளே இன்று தத்தளித்துக் கொண்டு நிற்பதை காணக்கூடியதாக உள்ளதுடன் அந் நாடுகள் பொருளாதார சரிவை மீட்க பல முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன. அண்மையில் பொருளாதார ரீதியாகவும் பணபல ரீதியாகவும் உச்சத்தில் உள்ள சவுதி அரேபியா தனது நாட்டு வரியை மூன்று மடங்காக அதிகரித்ததுடன் அரச சேவையில் உள்ளவர்களின் ஒருமாத சம்பளத்தை அரசுக்கு அளிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. இந்த கொரோனாவில் தாக்கத்தால் உலகின் முதலாவது வல்லரசாகவும் பொருளாதார ரீதியாக மிகவும் பலம் கொண்ட நாடாகவும் உள்ள அமெரிக்கா உலக வங்கியிடம் பல கோடி ரில்லியன் பண உதவி கோரியுள்ளது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறான நிலையில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கி சுமார் 30 ஆண்டுகால உள்நாட்டு கோர யுத்தத்துக்கு முகம் கொடுத்த இலங்கையின் நிலை உண்மையில் மோசமானதாக தான் உள்ளது. இந்நிலையில் அரசு முடக்கநிலையை நீக்கி சமூக நிலைக்கு கொண்டு வந்து மிகச் சரிவில் உள்ள பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் மீட்க முயற்சிப்பது காலத்தின் தேவையாகும். ஊரடங்கு நீக்கப்பட்டு பங்கு சந்தை பரிவர்த்தனை ஆரம்பிக்கப்பட்ட பொழுதிலும் அது சரிவை நோக்கியே காணப்படுகின்றது. அரசு மேற்கொண்டுள்ள இவ்வாறான தளர்வு நடவடிக்கையை செயற்படுத்தும் பொழுது மாவட்ட ரீதியான பயணங்களையாவது சில நாட்களுக்கு இடைநிறுத்துவது சாலச் சிறந்ததாகும். சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத அரச தனியார் நிறுவனங்களை தற்காலிகமாக மூடிவிடுவது அத்துடன் பொதுப் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு தகுந்த தண்டனைகளை வழங்குவதுடன் பொது மக்களும் நாட்டின் பொருளாதாரம் மீட்க வேண்டும் என்பதில் கரிசணை கொண்டு இப் பொருளாதார நெருக்கடியில் தாமும் பாதிக்கப்படுவோம் என எண்ணி அரசும் சுகாதாரப் பிரிவினரும் முப்படையினரும் பொலிசாரும் கூறும் விடயங்களைசெவிமடுத்துஅநாவசியமாக வெளியில் நடமாடுவதையோ மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்துக்களில் ஈடுபடாமலும் குறிப்பாக வயோதிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் வீடுகளில் இருப்பதை உறுதி செய்வதுடன் அரசு எடுக்கும் துரித பொருளாதார அபிவிருத்தி செயலுக்கு ஆக்கபூர்வமாக உறுதுணையாக நிற்பதோடு கொரோனா என்னும் கொடிய வைரஸை இல்லாதொழித்து வர இருக்கும் பொருளாதார நெருக்கடியை இன மத பேதமின்றி ஒன்றாய் நின்று முறியடிப்போமாக.

**தாயகத்தான்**

# சுமந்திரனால் ஏமாற்றப்பட்டு வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் – தலைமை பதில் சொல்லுமா?




1. இடைக்கால அறிக்கையில் சமஷ்டி இருக்கிறது என வடக்கு மேடைகளில் உங்களை அருகில் வைத்து கொண்டு சுமந்திரன் பல இடங்களில் பொய் பேசி இருக்கிறார். எப்போதாவது இடைக்கால அறிக்கையில் எந்த இடத்தில் சமஷ்டி இருக்கிறது என திரு சுமந்திரனை கேட்டு இருக்கிறீர்களா ?

2. இலங்கைக்கு ஒற்றையாட்சி பொருந்தாது என இடைக்கால அறிக்கையின் முதல் பக்கத்தில் சொல்லப்பட்டு இருப்பதாக திரு சுமந்திரன் பொய் சொல்லி ஏமாற்றிய போது நீங்கள் அமைதியாக திரு சுமந்திரன் அருகில் இருந்தீர்கள். எப்போதாவது இந்த பொய்களுக்கு துணை போனது குறித்து வருந்தி இருக்கிறீர்களா?

3. அரசியலமைப்பு பேரவையாக கூடிய பாராளுமன்றத்தில் சமஷ்டியின் அடிப்படை பண்பான இறைமை பகிரப்பட்ட தேவை இல்லை என சொன்ன திரு சுமந்திரன் வடக்கு கிழக்கு மேடைகளில் பகீரப்பட்ட இறைமையின் அடிப்படையில் தீர்வு என பிரச்சாரம் செய்த போது உங்கள் அரசியல் அறம் எங்கு போனது ?

4. நல்லாட்சி அரசாங்க காலத்தில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்க முயற்சியில் தெற்கின் அரசியல் கட்சிகளுக்கு இடையே பொது இணக்கப்பாடு இருப்பதாக திரு சுமந்திரன் பிரச்சாரம் செய்த போது உங்களுக்கு அறுவருப்பாக இருக்கவில்லையா ?

5. ஜெனீவா Fact Finding அறிக்கையில் Investigation Report என சொல்லப்பட்டு இருப்பதால் இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என சுமந்திரன் விதண்டாவாதம் பேசிய போது நீங்கள் கட்சியின் தலைவராக ஏன் அமைதிகாத்தீர்கள்?

6. 2015 பொது தேர்தல் மேடைகளில் சர்வதேச விசாரணை வேண்டும் என முழக்கமிட்ட திரு சுமந்திரன் , சமகாலத்தில் சர்வதேச பிரதிநிதிகளை சந்திக்கும் பொது சர்வதேச மேற்பார்வை வேண்டும் என சொன்னார். ஊடகங்களிடம் சர்வதேச விசாரணையும் சர்வதேச மேற்பார்வையும் ஒன்று என வியாக்கியானம் செய்தார். இது எல்லாம் அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் தவறான வாதம் என்பது உங்களுக்கு தெரியாதா?

7. மாமனிதர் ரவிராஜ் வழக்கு , குமாரபுரம் கொலை வழக்கு , திருகோணமலை 5 மாணவர் படுகொலை வழக்கு போன்ற எண்ணற்ற வழக்குகளில் தமிழர்கள் ஏமாற்றப்பட எந்த கூச்சமும் இன்றி நல்லாட்சி அரசாங்கத்தில் நீதித்துறையில் அரசாங்க தலையீடு இல்லை என சுமந்திரனும் சம்பந்தனும் சொன்ன பொய்களை நீங்கள் நம்பினீர்களா ?



8. நல்லாட்சி அரசாங்க காலத்தில் பல மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கலும் தொடர்ச்சியாக நடக்கும் போது சுமந்திரன் நல்லாட்சி அரசாங்க காலத்தில் எந்த குடியேற்றமும் நடக்கவில்லை என சாதித்தார். இதை ஏன் நீங்கள் கேள்விக்கு உட்படுத்தவில்லை?

9.அரசியல் கைதிகளை விடுவிக்க தங்களிடம் திறப்பு இல்லை என சம்மந்தன் எகத்தாளம் பேசிய போது கட்சி தலைவராக உங்கள்நிலைபாடு என்னவாக இருந்தது ?

10. தொல்லியல் திணைக்களம் தொடக்கம் வனவளத் திணைக்களம் வரை போட்டி போட்டு காணிகளை அபகரிக்க அரசாங்கத்தோடு சேர்ந்து நின்று கொண்டு திரு சுமந்திரன் 80 % ஆன காணிகள் விடுவிக்கப்பட்டதாக பொய் சொன்ன போது உங்களுக்கு கோபம் வரவில்லையா?

11. கலப்பு நீதிமன்றத்தை அரசாங்கம் ஐ.நா மனித உரிமை பேரவையில் நிராகரித்து விட்ட பின்னரும் அரசாங்கத்தோடு இணைந்து கால நீடிப்புக்கு திரு சுமந்திரன் வக்காலத்து வாங்கி துணை போன போதும் வடக்கு கிழக்கு மேடைகளில் கால நீடிப்பு அல்ல ஐ.நா மேற்பார்வை என கதை சொன்ன போதும் திரு சுமந்திரன் அவர்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது ஏன் ?

12. OMP யினால் கண்டு பிடிக்கப்படும் எந்தவொரு விடயமும் குற்றவியல் அல்லது சிவில் சட்ட மீறல் சம்பந்தமான குற்றத்திற்கு வழிவகுக்காது என தெரிந்து இருந்தும் திரு சுமந்திரன் காணாமல் போனோர் ஆணைக்குழுவிற்கு வக்காளத்து வாங்க கட்சி தலைவராக நீங்கள் ஏன் அனுமதித்தீர்கள்?

13. உங்கள் கட்சி கொள்கையை மீறி திரு சம்பந்தன் சுமந்திரன் அமைச்சர்களுக்கு நிகராக சுதந்திர தினத்தில் பங்குபெற்று தமிழ் மக்களுக்கு தேசிய உணர்வு இருக்க வேண்டும் என பாடம் நடத்திய போதும் தேசிய கொடி தேசிய கீதம் ஆகியவற்றை ஏற்று கொண்டதாக அறிவித்த போதும் நீங்கள் ஏன் அமைதியாக இருந்தீர்கள் ?

14. உங்கள் கட்சி ஆட்சி அமைத்த வட மாகாணசபையை சுமந்திரன் அல்லக்கைகள் குழப்பி சீரழித்த போது நீங்கள் அவர்கள் மீது கட்சி தலைவராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்த காரணம் என்ன?

15. தமிழ் தேசிய அரசியலுக்கு சம்பந்தம் இல்லாத பலரை தெற்கில் இருந்து அழைத்து வந்து வடக்கில் மகளிர் தினம் , மே தினம் என கொண்டாட்டங்களை நடத்திய போதும் நீங்கள் ஏன் பேசவில்லை?

16. கடந்த 4 ஆண்டுகளாக மத்திய அரசியலில் நீங்கள் அங்கம் வகித்தீர்கள். திரு சுமந்திரன், திரு சம்பந்தன் ஆகியோருக்கு தனிப்பட்ட நலன்கள் பல வழங்கப்பட்டன. அமைச்சரவை அமைச்சர்களுக்கு நிகரான சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் உங்கள் கட்சி கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொன்ன விடயங்களில் ஒன்றை கூட நிறைவேற்ற முடியாமல் போனதற்க்கு யார் காரணம்?

17. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனா சமஷ்டி அரசியல் அமைப்புக்கு உடன்பட்டதாக திரு.சுமந்திரன் பொய் சொன்ன போது நீங்கள் அவரை பொய் சொல்லுவதற்கான காரணம் குறித்து விசாரித்தீர்களா?

தமிழ் தேசிய அரசியல் என்பது வியாபாரமல்ல. உங்களிடமும் உங்கள் கட்சியிடமும் அப்பாவி மக்கள் நேர்மையைத் எதிர்பார்க்கிறார்கள். அரசியல் அரங்கில் என்ன நடக்கின்றது என்ற உண்மையை சொல்ல வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தங்கள் பிரச்சனைகளுக்கு நியாயம், தீர்வு கிடைக்காவிட்டால் மக்கள் ஆச்சரியப்படமாட்டார்கள். ஆனால் தம்மை தமது அரசியல் பிரதிநிதிகள் ஏமாற்றக் கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த குறைந்தபட்ச எதிர்பார்ப்பையாவது பூர்த்தி செய்வது ஜனநாயக அரசியலுக்கு மிக அத்தியாவசியமானது. தேர்தல் அரசியல் மீது மக்களுக்கு இருக்கும் அவநம்பிக்கையீனத்தை மோசமடையச் செய்யாமல் இருக்க தேவையானது

இரணியன்

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் சுமந்திரன் தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சர்ச்சை

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சர்ச்சை.

அது அவரின் தனிப்பட்ட கருத்து என கூறியதில் சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது. ஆனால்தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்தை தவிர வேறு கருத்து வழங்கவில்லை என்று அன்றைய நேர்காணலில் எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் கூறியிருக்கின்றார்.

இந்தநிலையில் குறித்த நேர்காணலில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களே நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் தானே? ஆம். அப்படியாக இருந்தால் நீங்கள் கூறும் கருத்துதானேதமிழ்தேசியகூட்டமைப்பின் கருத்தாகும்.

அதற்கு பதிலளித்த சுமந்திரன் அவர்கள் **தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்தை தான் நான் கூற வேண்டும். எப்பொழுதும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்தை தவிர வேறு எந்த கருத்தையும் நான் கூற மாட்டேன்.** குறித்த நேர்காணலில் குறிப்பிடப்பட்ட விடயம் இதுவாகும்.




அவ்வாறிருக்க சில தினங்களுக்கு முன்னரான நேர்காணலில் சுமந்திரன் நேர்மையாக பதிலளித்துள்ளார் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன்கூறியமைமுரண்பாட்டை தோற்றுவித்துள்ளது.

குறித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகஅறிக்கை பின்வருமாறு: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் அவர்களினால் விடுக்கப்படும் அறிக்கை முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான ஜனாதிபதிச் சட்டத்தரணி திரு. எம்.ஏ.சுமந்திரனினால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பேட்டியொன்றின் மீது எனது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

**பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத ஒரே இலங்கைக்குள் தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை முறியடிக்கும் உள்நோக்கத்தோடும் இந்த நாட்டு மக்கள் மத்தியில், அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் திரு. சுமந்திரன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்ப்பட்டுள்ளார்.**

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்கடந்த30ஆண்டுகளுக்கு மேலாக பல்லின, பல்கலாசார, பன்மைத்துவ சமூகமொன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக கணிசமானளவு கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கொண்டுவருவதற்காக அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் பெருமளவு பணிகள் செய்யப்பட்டுள்ளன. இவையனைத்தும் பதிவான விடயங்களாகும்.

திரு.எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்கப்பட்ட கேள்விகள் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை எற்படுத்தும் நோக்கம் கொண்டவையாக உள்ளன. இப்பேட்டியின் நோக்கம் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஆகிய அனைவர் மத்தியிலும் தற்போது நடைபெற்று வரும் நடைமுறையை குழப்புவதாகும். அத்தகைய தீய முயற்சிகளினால் மக்கள் குழப்பமடையவும் தவறாக வழிநடத்தப்படவும் கூடாது.

1949 ஆம் ஆண்டு தொடங்கி 70 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் தமிழ் அரசியல் போராட்டம் போன்ற சமத்துவத்திற்கும் நீதிக்குமான ஒரு நீண்ட அரசியல் போராட்ட வரலாற்றின் போது பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

தமிழர் போராட்டம் தொடங்கியபோது அது ஜனநாயக ரீதியானதாகவும் சமாதான வழியிலானதாகவும் வன்முறையற்றதாகவுமே இருந்தது.

ஜனநாயக வழியிலானதும், சமாதானமானதும் வன்முறையற்றதுமான தமிழர் போராட்டம் தொடங்கி ஒரு 30 ஆண்டு காலப்பகுதியின் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) 70 களின் பிற்பகுதியிலும் 80களின் தொடக்கத்திலும் தமது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். முதல் மூன்று தசாப்தங்களின்போது தமிழர் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காணப்பட்டிருப்பின், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் தோன்றியிருக்காது. அகிம்சை வழியில் பற்றுறுதி கொண்டிருந்த தமிழ்த் தலைவர் திரு எஸ்.ஜே.வீ. செல்வநாயகத்தோடு செய்துகொள்ளப்பட்டஉடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் பெரும்பான்மை இனத்தலைவர்கள் அமுல்படுத்தத் தவறியமையே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உருவாவதற்கு வழிவகுத்தது. 2009 ஆம் ஆண்டுவரை நீடித்த ஆயுதப் போராட்டக் காலத்திலும் கூட அமைதிவழி தமிழர் போராட்டம் தொடர்ந்தது இன்னும் தொடர்கிறது.

நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் எதிர்காலம் எவ்வாறு அனைத்து மக்களுக்கும் ஒளிமயமானதாக அமையக்கூடும் என்பதை இந்நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதியானதும்ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான தீர்வொன்றையே தனது இறுதியான ஆர்வமாகக்கொண்டுள்ளதிரு. சுமந்திரன் அந்தக் கண்ணோட்டத்திலிருந்தே வினாக்களுக்கு விடையளித்துள்ளார். சில விடயங்கள் மீது அவர் தனது சொந்தக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.


நீதி, சமத்துவம், சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையிலான தீர்வொன்றின் மூலம் ஏற்படுத்தப்படும் நிரந்தர சமாதானத்தின் அடிப்படையில் தேசியப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டால் மாத்திரமே இலங்கைக்கும் அதன் அனைத்து மக்களுக்கும் முன்னேற்றமும் செழிப்பும் ஏற்பட முடியும். அத்தகைய தீய முயற்சிகளினால் தவறாக வழிநடத்தப்பட வேண்டாமெனவும் பெரும் கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான தீர்வொன்றைக் காணும் முயற்சியின்மீது கவனத்தைச் செலுத்துமாறு சிங்களவர், தமிழர் மற்றும் ஏனைய அனைத்து இனத்தவர்கள் ஆகிய அனைத்து மக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தேசியப் பிரச்சினைக்கான தீர்வுடன் நேரடியாகத் தொடர்புபடாத விடயங்கள் மீது முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதற்குப் பதிலாக, இத்தகையதொரு நிலைப்பாட்டின் பின்னால் ஒன்றுபட்டு நிற்பதிலேயே நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமானதொரு தீர்வினை அடைவதற்கான எமது வலிமை தங்கியுள்ளது என்பதை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.


**கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் பல வழிகளிலும் பெருமளவில் துன்பம் அனுபவித்துள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்றம் பெறுவதற்கு முன்னரும் தமிழ் மக்கள் இனஅழிப்பிற்கு ஆளாகியிருந்தனர். ஒரு பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர். தமக்கு நிகழ்ந்தவற்றைத் தமிழ் மக்கள் தவிர்க்க முடியாதவாறு வேதனையோடு நினைவுகூர்வர். எனினும் முக்கிய பிரச்சினை தொடர்பிலான அவர்களது சிந்தனையோட்டத்தை இது சிதறடித்துவிடக்கூடாது.**

தேசியப் பிரச்சினைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு தீர்வு மாத்திரமே தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தையும் நிம்மதியையும் முழு நாட்டிற்கும்அதன்அனைத்துமக்களுக்கும் நிரந்தர சமாதானத்தையும் செழிப்பையும் வழங்கும். இக்குறிக்கோளை அடைவதற்காக ஒற்றுமையாகப் பாடுபடுவது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும்.

ஆர்.சம்பந்தன்




# பிராந்தியச் செய்திகள்



## வவுனியாவில் வியாபார நிலையத்தில் தீ விபத்து

வவுனியா, சிறிராமபுரத்தில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வவுனியா, காத்தார் சின்னக்குளம் வீட்டுத்திட்டம், திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்திருந்த பல்பொருள் வியாபார நிலையமே அன்று (சனிக்கிழமை) இரவு 8 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

குறித்த வர்த்தக நிலையம் இரவு 8 மணியளவில் மூடப்பட்ட நிலையில் கடையிலிருந்து புகை வெளிக்கிளம்பியுள்ளது. அதனை அவதானித்த சிலர் தீயை அணைக்க முற்பட்டதுடன் நகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எனினும் கடை முழுவதுமாக தீப்பற்றி எரிந்ததனால் கடையினுள் இருந்த சுமார் பத்து இலட்சம் பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் மின் ஒழுக்கினாலேயே இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## இலங்கையில் பலத்த மழைவீழ்ச்சி

தென் கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள கடற்பரப்புகளிலும் விருத்தியடைந்த ஆழமான தாழமுக்கம், அம்பன் (AMPHAN) என்ற சூறாவளியாக விருத்தியடைந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 02.30 மணிக்கு திருகோணமலைக்கு வடகிழக்காக ஏறத்தாழ 610 கி.மீ தூரத்தில், வட அகலாங்கு 1.30 N இற்கும் கிழக்கு நெடுங்கோடு 86.10 E இற்கும் இடையில் மையம் கொண்டுள்ளது.இது அடுத்த 12 மணித்தியாலங்களில் ஒரு பாரிய சூறாவளியாக விருத்தியடைவதுடன், மே 18ஆம் திகதி காலையளவில் மிகப் பாரிய சூறாவளியாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.அது ஆரம்பத்தில் 17ஆம் திகதி வரை வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து பின்னர் மே 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வடக்கு - வடகிழக்கு திசையில் திரும்பி மேற்கு வங்காள கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இத் தொகுதியின் தாக்கம் காரணமாக நாடு முழுவதும் குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடர்ந்து நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாடு முழுவதும் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.தென், மேல் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமானபலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல்மாகாணத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.



## 56 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது

ஊரடங்குச் சட்டத்தைமீறிய குற்றச்சாட்டில் 56,326 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




மேலும் கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 620 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்தமையைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலம் முதல் இது வரையான காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 56,326 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்இவ்வாறுகைதுசெய்யப்பட்டவர்களிடம்இருந்து274வாகனங்கள்கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 15490 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை எமது இருப்பிடங்களில் நினைவேந்துவோம்

கொரோனா இடர்கால நிலைமை கருத்திற் கொண்டு தமது வீடுகளில் இருந்தவாறே முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை நினைவேந்துவோம் என தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.இந்த விடயம் குறித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை, "மே 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 11ஆவது நினைவு தினத்தினை தமிழ் தேசமும் உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளும் நாளை (திங்கட்கிழமை) நினைவேந்தவுள்ளன. வெற்றுக்கோசமாகிப்போன பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை மற்றும் உலகப் பெரும் தொற்றாகிய கொரோனோ என்பவற்றிற்கிடையில் நாம் இம்முறை இந்த நினைவு தினத்தினை எதிர்கொள்கின்றோம். தமது சுதந்திரமான வாழ்வியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய தமிழ் மக்களின் மூன்று தசாப்தகால விடுதலைப்போர், பல்லாயிரம் மக்களின் சாட்சிகளற்ற படுகொலைகளோடு மௌனிக்கப்பட்டு 11 ஆண்டுகள் எந்தவிதமான காத்திரமான அரசியல் தீர்வுகள் இன்றி கடந்துவிட்டது.

2009 மே மாதம் 18ம் திகதியில் இந்த விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்படுவதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தமிழர் தாயகப் பகுதியில் பல இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் ஓர் குறுகிய நிலப்பரப்புக்குள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு குண்டுவீச்சுக்களாலும் எறிகணைகளாலும் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். அந்த நாட்களில் ஒரு வேளை உணவுக்காக கஞ்சியுடன் உயிரைக் கையில் பிடித்தபடி தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பம் வார்த்தைகளால் வடிக்க முடியாது. இந்த வகையில் வருடா வருடம் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலானது தமிழ் மக்களால் பேரெழுச்சியாக உணர்ச்சியுடன் நினைவுகூரப்பட்டு வருகின்றது.

இம்முறையும் தமிழ் மக்களாகிய நாம் கொரோனா இடர்கால நிலைமை கருத்திற் கொண்டு எமது வீடுகளில் இருந்தவாறே இந்த நினைவேந்தலை எதிர்வரும் 18ஆம் திகதி அனுஷ்டிக்க வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் பொறுப்புக்கூறலுக்காக பல இனங்கள் சமூகங்கள் நீண்டகாலம் காத்திருக்க போராட வேண்டியிருந்தமை கண்கூடு. அதே போலவே நாமும் எமக்கான நீதி கிடைக்கும்வரைக்கும் காத்திருக்கவும், கிடைக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களையும், வளங்களையும் சிறந்தமுறையில் பயன்படுத்தி மாறுகின்ற பூகோள ஒழுங்கிற்கமைய அகிம்சை வழியில் போராடவும் வேண்டும்.

இதை அடையும் வரையும் இனத்திற்கான நியாயம் கிடைக்கும் வரைக்கும் ஓயாது செயற்படவும் இவ்வகையான நினைவேந்தல்கள் அவசியமானவையும் வரலாற்றை ஊடு கடத்துபவையாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அடுத்த தலைமுறையினருக்கும் எமது வரலாற்றை கடத்துவது எதிர்காலத்தில் இவ்வாறான சூழல்களை அவர்கள் எவ்வாறு அணுகவேண்டும் அவற்றை எவ்வாறு கையாண்டு எமது நியாயங்களை நிலைநிறுத்த வேண்டும் என்பதையும் உணர்த்தும்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினாலும் ஏனையோராலும் வேண்டப்பட்டவாறு அன்றைய தினம் நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் ஒருமித்த உணர்வோடும் வலிமிகுந்த நாட்களில் தமிழ் மக்கள் பட்ட வலிகளின் அடையாளமாக ஒரு வேளை உணவாக கஞ்சியை குடித்து அந்த மக்கள் அன்றைய நாட்களில் பட்ட துன்பத்தை நினைவுகூர்வதுடன் மாலை 06 மணி தொடக்கம் 07 மணி வரையான காலப்பகுதியில் சுடரேற்றி நினைவேந்தலினை மேற்கொள்வோம் என தமிழ் மக்கள் பேரவையினராகிய நாம் வேண்டி நிற்கின்றோம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.






தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் முன்னணி நடிகர் சிவகார்த்திகேயன். இவர் நடிப்பில் கடைசியாக ஹீரோ படம் வெளிவந்தது.

இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பு பெறவில்லை, படம் படுதோல்வியடைந்தது.

இந்நிலையில் சிவகார்த்திகேயன் கடைசி 5 படங்களின் வசூல் என்ன என்பதை பார்ப்போம், இதோ...

ஹீரோ- ரூ 26 கோடி

நம்ம வீட்டு பிள்ளை- ரூ 75 கோடி

மிஸ்டர் லோக்கல்- ரூ 25 கோடி

சீமராஜா- ரூ 50 கோடி

வேலைக்காரன்- ரூ 88 கோடி

சிவகார்த்திகேயன் கடைசி 5 படங்களில் நம்ம வீட்டு பிள்ளை மட்டுமே எல்லோருக்கும் இலாபம் கொடுத்த படம்.



நடிகை திரிஷா தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக திகழ்பவர், இந்த லாக்டவுன் நேரத்தில் தனது டிக்டாக் பக்கத்தில் பல்வேறு விதமான விடியோக்களை பதிவிட்டு அவரின் ரசிகர்களை குஷிப்படுத்திவருகிறார். இந்நிலையில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது கேள்விக்கு பதிலளித்து வந்தார். மேலும் இந்தியா சினிமாவின் மூன்று சிறந்த நடிகர்கள் யாரென்றும் கூறியுள்ளார்.

1. கமல், 2. மோகன்லால், 3. அமீர் கான் என தனக்கு பிடித்த மூன்று சிறந்த நடிகர்கள் என கூறியுள்ளார்.

மேலும் இயக்குனர் கவுதம் மேனன் இயக்கத்தில் அவர் நடித்து வரும் கூறும் படமான கார்த்திக் டயல் செய்த எண் எப்போது வெளியாகும் என ரசிகர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த திரிஷா அந்த கூறும் படத்திற்கு இசையமைக்கும் வேலை நடந்து வருவதாகவும், விரைவில் கூறும் படம் வெளியாகும் எனவும் கூறியுள்ளார். அதோடு தன் வாழ்வில் இதுவரை உண்மையான காதலையே சந்தித்தது இல்லை என்று கூறியுள்ளார்.




கொரோனா காரணமாக கடந்த சில மாதங்களாக ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைக்கு திரைப்படங்களின் போஸ்ட் ப்ரோடாக்ஷன் பணிகளை மட்டும் தொடங்கி கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆனால் திரையரங்கம் திறப்பதற்கு இன்னும் மூன்று மாதங்கள் ஆகும் என கூறப்படுகிறது. இதனால் ஒரு சில திரைப்படங்கள் OTTயில் வெளியாகும் என கூறப்படுகிறது.

நடிகை ஜோதிகாவின் பொன்மகள் வந்தால் திரைப்படத்தை நடிகை சுரேஷ்-ன் பென்குயின் திரைப்படமும் OTT யில் வெளியாகும் என கூறப்படுகிறது.



நடிகர் விஜய் மற்றும் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் மாஸ்டர். இப்படத்தில் முதல்முறையாக நடிகர் விஜய் சேதுபதி வில்லனாக நடித்துள்ளதால் ரசிகர்களிடையே மிக பெரிய எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழ் சினிமாவிற்கு இரண்டு தரமான திரைப்படங்களை கொடுத்த லோகேஷ் கனகராஜ் தான் மாஸ்டர் திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

மேலும் அனிருத்தின் இசையில் இப்படத்தின் பாடல்கள் பட்டிதொட்டி எங்கும் வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பாக வாத்தி கமிங் பாடல் இந்திய அளவில் வைராகியுள்ளது.

இந்நிலையில் லோகேஷ் கனகராஜ் மற்றும் ரத்ன குமார் ஆகியோருடன் மாஸ்டர் திரைக்கதையை எழுதியுள்ள பொன் பார்த்திபன் பேட்டி ஒன்றில் மாஸ்டர் திரைப்படம் குறித்த மாஸ் அப்டேட்டை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் "இயக்குனர் லோகேஷ் கனகராஜ் நிஜ வாழக்கையில் ஒருவரின் கதையால் ஈர்க்கப்பட்டு இந்த மாஸ்டர் திரைப்படத்தை உருவாகியுள்ளார்" என கூறியுள்ளார்.




தொகுப்பு :- ஹாசினி






## அடர்த்தியாக முடி வளர என்ன செய்யவேண்டும் தெரியுமா...?

முடி கொட்டுவதற்கு என்ன காரணங்கள் உள்ளன என்று முதலில் பார்க்கலாம். அவற்றைத் தெரிந்து கொண்டால் மட்டுமே வேண்டியவற்றைத் தவிர்க்க இயலும்.

முடி கொட்டுதல் ஏற்படுவதற்கு மிக முக்கியமான காரணம் ஊட்டச்சத்துக் குறைபாடுதான். அன்றாட ஆரோக்கிய மற்றும் சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்வது மிக அவசியம்.

முடி கொட்டுதல் மற்றும் வழுக்கை ஏற்படுதல் போன்ற தொல்லைகளுக்கு மற்றொரு முக்கியமான காரணம் பரம்பரை பிரச்சினையாகும். தந்தை வழியில் அல்லது தாய் வழியில் இந்த பிரச்சினை இருக்கும் பட்சத்தில் ஜீன் மூலம் பிள்ளைகளுக்கும் வந்து சேரும்.

முடி உதிர்தலும் மன அழுத்தமும் நேரடியாக தொடர்பு கொண்டன. கவலை , அளவுக்கதிகமான யோசனை போன்ற விஷயங்கள் முடியின் ஆரோக்கியத்தைப் பெரிய அளவு பாதிக்கும். உடலுக்குத் தேவையான தூக்கம் கிடைக்காத போதும் முடி உதிர்தல் பிரச்சனை அதிக அளவு காணப்படும்.

சராசரியாக ஒரு நாளுக்கு 2 லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும்.போதுமான தண்ணீர் அருந்தவில்லை என்றால் முடி நிச்சயமாகக் கொட்டத் தொடங்கும்.

சிறிதளவு தேங்காய் எண்ணெய் எடுத்துக் கொள்ளவும். இதை அடுப்பிலேற்றி மிதமான அளவு சூடுபடுத்திக் கொள்ளவும். இதனை மிருதுவாக ஸ்கால்ப்பில் விரல்களைக் கொண்டு சுழற்சி முறையில் தேய்க்கவும். இதனை சில நிமிடங்கள் செய்யவும். இரவு முழுதும் அப்படியே விட்டுவிட்டு அடுத்த நாள் காலையில் தலைக்குக் குளிக்க வேண்டும். இப்படி மசாஜ் செய்வதன் மூலம் மயிர்க் கால்களில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் முடி வளர்ச்சி தூண்டப்படும்.

தேவையான அளவு சிறிய வெங்காயங்களை உரித்து வைத்துக் கொள்ளவும். இவற்றை மிக்ஸியில் அரைத்து விழுதாக்கி எடுத்து வைத்துக் கொள்ளவும்.இந்த விழுதைப் பிழிந்து சாற்றைத் தனியாக வடித்து எடுத்து தலை மற்றும் முடிக்குப் பூசவும். இந்த வழியை மாதம் 1 முதல் 2 தடவைகள் பின்பற்றுவது நல்ல பலனைத் தரும். வெங்காயத்தில் உள்ள சல்பர் முடி வளர்ச்சியைத் தூண்டும் தன்மை கொண்டது. இந்த சல்பர் குறிப்பாக முடி பிளவுபடுவதைத் தடுக்க துணைபுரியும். மேலும் இளநரை ஏற்படுவது தவிர்க்கப்படும்.

கொத்தமல்லித் தழைகளைக் கழுவி ஒரு கப் அளவிற்கு எடுத்துக் கொள்ளவும். இதனை அரைத்து சாற்றை வடித்து எடுத்துக் கொள்ளவும். இதனை தலையில் பூசி அரைமணிநேரம் ஊறவைத்து விடுங்கள். பிறகு முடியினை ஷாம்பு கொண்டு நன்கு அலசவும். இதை வாரம் ஒரு முறை செய்யவும். முடி கருமையாகவும், பளபளப்பாக மாறி, அடர்த்தியாக வளரத் தொடங்கும்.

## அடர்த்தியான புருவங்கள் வேண்டுமா...? எளிய இயற்கை அழகு குறிப்புகள்...!

கற்றாழை எளிதில் கிடைப்பதால் பயன்படுத்த மாட்டீர்கள். இதில், அலோனின் என்ற சத்து புருவம் வளர உதவும். முடி உடையாமல் இருக்க, கெரட்டின் போன்ற சத்து இதில் இருக்கிறது.

சிறிது கற்றாழையை எடுத்து, மேல் தோளை சீவி விட்டு, உள்ளே இருக்கும் ஜெல் மட்டும் புருவத்தில் தடவினால் போதும். வேறு இந்தப் பொருளையும்விட இது எளிமையானது, நல்ல வளர்ச்சியை கொடுக்கக்கூடியது.

வெந்தயத்தை இரவு தண்ணீரில் ஊறவைத்து விடுங்கள். மறுநாள் அதை ஒரு பேஸ்ட் போல அரைத்துக் கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை புருவங்களில் தடவுங்கள். அரை மணி நேரம் கழித்து கழுவி விடுங்கள். இது புருவ முடிக்கு நல்ல பொலிவைத் தரும். இதில் நிகோடினிக் அமிலம், புரதச் சத்து, லெசிதின் ஆகியவை இயற்கையான நிறத்தை தக்கவைத்து, புருவம் வளர மிகவும் உதவும்.

விளக்கெண்ணெய்யை தினமும் புருவங்களில் பயன்படுத்தினால், அடர்த்தியான, கருமையான புருவங்கள் வளரும். விளக்கெண்ணெய்யில், புரதச்சத்து, ஆன்டி-ஆக்ஸிடன்ட் மற்றும் விட்டமீன்கள் இருப்பதால் புருவத்தின் வேருக்கு நல்ல ஊட்டச்சத்து அளிக்கிறது.

ஆலிவ் எண்ணெய்யில் விட்டமின் ஈ சத்து நிறைந்து இருப்பதால், உங்கள் புருவங்கள் நன்றாக வளர உதவும். வெது வெதுப்பான ஆலிவ் எண்ணெய்யை புருவங்களுக்கு தினமும் தடவி வாருங்கள்.

முட்டையின் மஞ்சள் கருவில் புரதச்சத்து மற்றும் பயோடின் என்னும் சத்து அதிகம் இருப்பதால், புருவம் வளர மிகவும் உதவுகிறது. முட்டையின் மஞ்சள் கருவை ஒரு தூரிகையின் உதவியுடன் தடவி 20 நிமிடங்கள் கழித்து கழுவவும் . இது உங்கள் புருவங்களை அடர்த்தியாகவும், கூந்தல் உதிர்வதற்கான வாய்ப்புகளையும் குறைகிறது.

விட்டமீன் பி, சி ஆகியவை உள்ளதால் புருவம் நன்றாக வளரும். மயிர்கால்களை நன்றாக உறுதியாக்குகிறது. வெங்காயத்தை தோள் உரித்து, ஜூஸ் செய்து, அதை தடவினால் போதும். வெங்காயம் ஒரு வாசனை கொடுக்கும் என்பதால், சிறிது எலுமிச்சை சாறு கலந்து தடவலாம்.

8. தேங்காய் எண்ணெய்யில் உள்ள லாரிக் அமிலம், ஆன்டி-மைக்ரோபையல் தன்மை கொண்டதால், முடிக்காலில் இன்பெக்ஷன் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும். வாரத்தின் சில நாட்கள் பயன்படுத்தினாலே நல்ல பிரதிபலன் கிடைக்கும். இரவு தூங்கும்முன் புருவங்களில் தடவிக்கொண்டு தூங்கலாம். தினமும், புருவத்தை நன்றாக மசாஜ் செய்யுங்கள். இதுவும் இரத்த ஓட்டத்தை சீராக்கும். கிரீம், லோஷன் போன்ற ரசாயனங்களை தவிருங்கள். புருவம் வளருவதை இது பாதிக்கும். பயோட்டின் என்ற வைட்டமின் புருவம் வளர ஏதுவான சத்து ஆகும்.





## உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் நிறைந்துள்ள பேரீச்சம் பழம்...!!

தினந்தோறும் ஐந்து பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டு வந்தால் சுகப்பிரசவம் ஆகும். மேலும் இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்புகளை பேரீச்சம் பழம் சாப்பிட்டு வருவதன் மூலமாக நீக்கி விடலாம்.

கண்பார்வை குறைபாட்டை குணப்படுத்த சிறந்த மருந்து பேரீச்சம் பழமே, இதில் விட்டமின் 'ஏ' அதிகமாக உள்ளது , மாலைகண் நோயால் பாதிக்கபட்டவர்கள், தேனுடன் பேரீச்சம் பழத்தை கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வர உடலுக்குதேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்கும். எனவே கண் பார்வைகோளாறுகள் நீங்கும்.

எந்த காரணமும் இன்றி உடல் இளைத்திருந்தாலும், அவர்கள் பேரீச்சம்பழத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தை முறையாக உணவோடு சேர்த்துக் கொள்வதால், மெலிந்த உடல் தேறும். போகக் களைப்பு நீங்கும். தாது விருத்தியும் பலமும் உண்டாகும்.

தினமும் பேரிச்சம் பழத்தை உட்கொண்டு வந்தால் மூளையின் செயல்பாடு மேம்படும். அதாவது ஞாபக சக்தி, ஒருமுகப்படுத்தும் தன்மை, கூர்மையான புத்தி, எதையும் எளிதில் கற்றுக் கொள்ளும் திறன் போன்றவை அதிகரிக்கும்.

பேரிச்சம் பழத்தில் உள்ள அதிகப்படியான இரும்புச்சத்து, உடலில் இரத்தணுக்களின் அளவை அதிகரித்து, இரத்த சோகை வரும் அபாயத்தைக் குறைக்கும். எனவே உங்கள் உடலில் இரத்தத்தின் அளவு சீராக இருக்க, தினமும் 3 பேரிச்சம் பழத்தை உட்கொண்டு வாருங்கள்.

சளி இருமலுக்கு பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி பருகி வந்தால் சளி, இருமல் குண-மாகும்.

பேரீச்சம் பழத்தை கொட்டைநீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சிய பசும்பாலில் சேர்த்துக் கலந்து, தேன் 2 ஸ்பூன், ஏலக்காய்-3, குங்குமப்பூ-5 இதழ் கூடிக் கலந்து பருகலாம். இதற்கு இணையான ஒரு டானிக் கிடையாது. சிறுவர்களுக்கு இது ஒரு சத்துள்ள நல்ல டானிக்.

தினமும் இரவில் படுக்கசெல்லும் முன்னர் ஒருடம்ளர் காய்ச்சிய பசும் பால் மற்றும் இரண்டு பேரீச்சம் பழத்தினையும் உண்டுவந்தால் உடல் நல்ல பலம் பெறும். புதிய ரத்தம் உண்டாகும். தோல்பகுதிகள் வழுவழுப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

**என் மனமானது கலங்கி நிற்கும்
போது உனது மௌனம்
கூட எனை அரவணைத்து
பாதுகாக்கும்**

தொகுப்பு :- சப்தஹி

2ஆம் பக்க தொடர்ச்சி...

ஆயுத போராட்ட வலி தெரிந்த ஒருவர் இந்த நேர்காணலை சந்தித்திருந்தால் குறித்த ஊடகவியலாளர் திக்கித்தினறிருப்பார். குறித்த ஊடவியலாளர் சிங்கள பேரின வாதிகளுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பவர். அது போன்று இதனை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து ஒளிபரப்பிய மற்றுமொரு ஊடகமும் மகிந்தவின் கைக்கூலியாக செயற்படும் ஊடகமாகும்.

ஆகவே இரண்டு இனவாதிகளும் ஒன்றாக இணைந்து எப்படியாவது சுமந்திரனை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு வெற்றிபெறுவதாக இருந்தால் குறித்த ஊடகத்தின் சார்பான குறித்த அரசியல்வாதி வெற்றிபெற முடியாது. ஆனால் இவ் விடயம் தொடர்பில் சுமந்திரன் மீது நீண்ட காலமாக பகைமையை வைத்த அரச ஊடகங்கள் அரசியல்வாதிகளுக்கு பொல்லைக்கொடுத்து சுமந்திரன் அடிவாங்கிய ஒரு விடயமாகவே இதனை பார்க்க முடிகிறது. இதனை வைத்து எதிர் வரும் தேர்தலில் அரசியல் வண்டியை ஓட்ட முடியும். குறித்த நேர்காணலில் சுமந்திரன் அவர்கள் தப்பித்துக்கொள்ளும் செயற்பாட்டை மேற்கொண்டாரா அல்லது அவரது உள் மனதில் இருந்து போராட்டம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதா என்பது அவருக்கு தான் தெரியும். அரசியல்வாதிகள் என்பவர்கள் நிரந்தரமான நண்பர்களோ நிரந்தரமான அரசியலோ இல்லை. அரசியல் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப அவர்களும் தங்களை மாற்றிக்கொள்வார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற வகையில் இன்னும் தீர்க்கப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. குறிப்பாக த.தே.கூட்டமைப்பு ஊடக பேச்சாளராக இருந்து இந்த கருத்தை வெளியிட்டமை சுமந்திரன் செய்த மாபெரும் குற்றமாகும். தனிப்பட்ட கருத்தை கூட த.தே.கூட்டமைப்பு இருந்து கொண்டு அவர் வெளியிட்டிருக்க கூடாது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு எந்த கொள்கை வழியில் இருக்கிறது என்பது அவருக்கு தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு தெரியாத ஒருவரை கூட்டமைப்பின் ஊடக பேச்சாளராக நிறுத்தியதும் தவறு. முன்னர் குறிப்பிட்டதை போல் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களோ சுமந்திரன் அவர்களோ த.தே.கூ இருக்கும் பொழுது ஆயுத போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். ஆகவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் த.தே.கூட்டமைப்பு உடைய தலைமை மாற்றப்பட வேண்டும் என்று கருதிவிட முடியாது. கட்சியில் தவறு விடுகிறவர்கள் தட்டிக்கேட்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அனந்தி சசிதரன், சிவகரன் இவர்களை போன்ற பலபேருக்கு கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தனிப்பட்ட ரீதியாக சுமந்திரன் அவர்கள் ஆயுத போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவாராக இருந்தால் அவர் ஊடகபேச்சாளராக இருப்பதற்கு தகுதியற்றவர். தமிழ் அரசியலில் தேசியம் சார்ந்த அரசியலிலும் இருப்பதற்கும் தகுதியற்றவர்.

ஆகவே இதற்கான ஒரு வழி பொது வெளியில் சுமந்திரன் அவர்கள் மன்னிப்பு கோர வேண்டும் அல்லது போனால் ஆயுத போராட்டத்தின் வழியாக வந்த கட்சிகளை நிராகரித்து தனக்கான ஒரு கட்சியை உருவாக்கி அதனோடு தனது அரசியலை செயற்படுத்த வேண்டும். ஆயுத போராட்டத்தை விரும்பாதவர்கள் இவருடன் இணைந்து செயற்படுவதற்கு தகுதியுடையவர்கள். த.தே.கூட்டமைப்பில் சுமந்திரனுக்கு சாதகமாக இருக்கும் அரசியல்வாதிகளும் சற்று சிந்திப்பார்கள். சுமந்திரனுடன் நிற்க கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, அனோல் இருவரும் போராட்டத்தின் வலி தெரிந்தவர்கள். சயந்தன் அவர்களுக்கு போராட்டத்தின் வலி தெரிய வாய்ப்பில்லை. ஆகவே சுமந்திரனுடன் ஒத்துப்போகின்றவர்கள் அவர்களுடன் ஒத்த அரசியலை செய்வது சிறந்தது. அதற்காக ஆயுத போராட்டத்தை கொச்சைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஆனால் சுமந்திரன் செய்தது தவறு என்று குரல் கொடுக்கின்றவர்கள் தங்களை ஒருமுறை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இறுதியில் கருணாஅம்மான் அவர்களும் சுமந்திரனை துரோகி என்று கூறும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. ஆகவே தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சரியான தருணத்தில் சரியான பதிலை வழங்க வேண்டும். இல்லையேல் கட்சியை பல துண்டுகளாக உடைத்து விட்டு தான் சுமந்திரன் வெளியேறுவார். அல்லது பல கட்சிகளாக கூட்டமைப்பு உடைக்கப்படும் அதற்கு முன் கூட்டமைப்பை சீர் செய்ய வேண்டியது அவசியம். கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் என்ற பதவியிலிருந்து விலக்கி வேறொருவரை நியமிப்பது காலத்தின் தேவை.

# மறக்க முடியுமா குமுதினிப் படுகொலை

நெஞ்சம் மறக்குமா அந்த துயர் இடம்பெற்று 35 வருடங்கள் உருண்டோடி விட்டது. ஆனால் அது தந்த துயர் இன்னும் யாழ் மக்கள் மனதை விட்டு அகலவில்லை. யாழ் மண்ணின் அருகில் பல தீவுகள் உள்ளன. இதில் படகு மூலம் பயணம் செய்யும் தீவுகளாக நெடுந்தீவு, நயினாதீவு போன்ற தீவுகள் யாழ் நகரை தரை வழியாக தொடர்பற்று காணப்படும் தீவுகள் ஆகும்.

இதில் நெடுந்தீவு மிகவும் பிரசித்தி பெற்ற தீவு ஆகும். யாழ் நகரில் இருந்து இத்தீவுக்கு செல்வதற்கு படகுச்சேவை இடம்பெற்றது 1985 மே 15 ஆம் திகதி யாழ் நகரில் இருந்து நெடுந்தீவுக்கு பயணமான குமுதினி அலைகடலில் ஆர்ப்பரிப்பு சத்தத்துடன் தனது அமைதியான பயணத்தை ஆரம்பித்தது. படகினுள் சுமார் 25 பேர் இருந்தனர். அதில் சிறுவர் குழந்தைகளும் காணப்பட்டனர்.

காரைநகர் கடல் ரோந்தில் ஈடுபட்ட கடற்படையினர் குமுதினி படகை மறித்தனர். மகிழ்ச்சியுடனும் ஆர்ப்பரிப்புடனும் கடலில் பயணித்த குமுதினிப் படகுக்குள் புகுந்த கடற்படை வெறியர்கள் படகில் இருந்த அனைவரையும் ஈவிரக்கம் இன்றி கோடாரியால் வெட்டியும் துப்பாக்கிகளால் சுட்டும் வெறித்தனமாக வேட்டையாடினர். தப்புவதற்கு வழியின்றி கடலுக்குள்ளும் பாய முடியாமல் சதை துண்டங்களாக படகினுள் மரணித்துப்போயினர். குழந்தைகள் என்று பாராமல் வெட்டி சாய்த்தனர் ஈணர்கள்.




அவர்கள் விட்ட ஓலம் அக் கடல் அலைகளினால் அமிழ்ந்து போய் விட்டது. 25 பேரில் இரண்டு பேர் காயங்களுடன் இறந்தவர்களின் உடல்களுக்குள் மறைந்து தப்பினர். அவர்கள் தப்பி வந்ததால் தான் இந்த படுகொலை வெளியுலகத்துக்கு தெரியவந்தது. 23 பேர் பரிதாபமாக இறந்து போயினர். 35 வருடங்கள் கடந்தாலும் அந் நினைவோடு அதில் பலியாகிய எம் உறவுகளை நெஞ்சில் சுமந்த வண்ணம் அஞ்சலி செலுத்துவோமாக.

# கோத்தாவின் குரங்குப்பிடிக்குள் இலங்கை

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் அரசியல் என்பது தொடர்ந்தும் சர்வாதிகாரப்பிடிக்குள்ளேயே முடங்கிப் போயுள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, ரணில் விக்ரமசிங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ச இவர்களுள் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தை வழங்குவதற்கு எவருமே தயாராக இல்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான தேசியம் சுயநிர்ணயம் தொடர்பில் அழுத்தங்கள் அரசாங்கத்தால் அச்சுறுத்தல்கள் விடப்படுகிறது. போராட்டம் இடம்பெற்று நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தை அரசாங்கம் மறுத்து வருகின்றது என்றால் அடுத்தகட்ட தமிழ் மக்களுடைய அரசியல் நகர்வுகள் என்னவென்று சிந்திக்கத் தோன்றுகிறது. அரசாங்கம் தனது அரசியல் நடவடிக்கைகளை நிலைநிறுத்துவதற்காக தமிழ் அரசியல் தலைமைகளையும் ஏனைய ஒட்டுக்குழுக்களையும் சரியாக பாவித்து வந்திருக்கிறது அல்லது பாவித்துக்கொண்டிருக்கிறது எனலாம்.

இந்திய இராணுவத்தினர் இலங்கையிலிருந்து வெளியேறியதற்கு பின்னரும் அதற்கு முன்னரும் நடைபெற்ற துரோக வரலாற்று சம்பவங்களை மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள். சர்வதேச நாடுகளை நம்பி இவர்களது போராட்டம் மலுங்கடிக்கப்பட்டதும் உலக வரலாறு. விடுதலைப்புலிகளுடைய போராட்டமானது ஒரு இனத்தின் விடுதலைக்காக இறுதிவரை போராடப்பட்டு வந்தது. இலங்கையின் வடகிழக்கில் மாகாணசபையாக இருக்கட்டும், பாராளுமன்றமாக இருக்கட்டும் விடுதலைப்புலிகளின் பெயரை வைத்தே தமது அரசியல் நகர்வுகளை நகர்த்துதி வந்திருக்கிறார்கள். அவ்வாறே வெற்றியும் பெற்றுள்ளார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் இலங்கை அரசியலை பொறுத்தவரையில் சர்வதேச நாடுகளின் உதவியோடு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தருவதற்கு விருப்பமில்லை. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் சர்வதேச மட்டத்தில் எடுத்துரைத்த தமிழ் அரசியல் தலைமைகளின் குரல்வலைகள் அரசாங்கத்தால் நசுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 35 ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். 200 க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் புத்திஜீவிகள் அல்பட் துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமம் வரை கொலை செய்யப்பட்டார்கள். அதை விட ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை நடந்த யுத்தத்தில் 2 அரை இலட்சம் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் தற்போதைய நிலையில் இவற்றையெல்லாம் மறந்து இங்கிருக்கக்கூடிய தமிழ் மக்கள் செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் நினைக்கிறது. அது முற்றிலும் தவறு. எப்படியாவது தேர்தல் ஒன்றை நடத்தி அதில் தான் வெற்றிபெற வேண்டும் என்பதே கோட்டபாய ராஜபக்சவினுடைய இலக்கு. அதற்கான சந்தர்ப்பம் சூழ்நிலைகளை பார்க்கும் பொழுது இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் கோட்டபாய ராஜபக்ச அவர்களுக்கு கரம் கொடுத்தது. அதே நேரம் தற்போதைய கொரோனா வைரஸ் தாக்கமும் அவருக்கு கை கொடுத்தது. இவ்விரண்டு சரி பிழைக்கு அப்பால் இவ்விரண்டு நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவினுடைய அரசியல் நடவடிக்கை என்பது அல்லாவிட்டால் இராணுவ உத்தி என்பது திறம்பட நடத்தப்பட்டது என்று கூறலாம். வேறு எந்த தலைவர்களும் சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் சம்பவமும் தற்போதைய கொரோனா வைரஸையும் தனது திறமையால் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் சர்வதேச நாடுகள் மெச்சும் அளவிற்கு திறம்பட நடத்தியிருக்கிறார் என்று கூற வேண்டும். ஆனாலும் தேர்தலை நடத்தி அதிலும் சாதனை படைக்க வேண்டும் என்று ஜனாதிபதி முனைகிறார். ஆனாலும் மக்களை பலிக்கிடாயாக்குகின்ற ஒரு நடிவடிக்கையாகவே இதனை பார்க்கப்படுகிறது. ஆகவே பாராளுமன்றத்தை எந்தவகையிலும் கூட்டப்போவதில்லை என்பது அவரின் குரங்குப்பிடியாக இருக்கிறது. இந்த குரங்குப்பிடியை தளர்த்துவாராக இருந்தாலும் அவரது ஆட்சிக்கு ஆபத்தாக இருக்கும். பாராளுமன்றத்தையே கூட்டுமாறு கூறுவது கோட்டபாயவின் குரங்குப்பிடி தளர்த்தப்படுவதற்கு சமனாகும். ஆகவே இந்த நிலையில் தொடர்ந்தும் இந்த நாட்டில் அனர்த்தங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இந்த அனர்த்தங்கள் இவர்களுக்குள் சாதகமான தன்மையை தோற்றுவித்தாலும் பாராளுமன்றம் அல்லது இலங்கைக்குரிய சட்டதிட்டங்கள் அல்லது விதிமுறைகள் இருக்கின்றன. இவற்றை மீறும் செயற்பாடுகளை ஜனநாயக ரீதியில் எவரும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

கோட்டபாய ராஜபக்சவை பொறுத்தவரையில் தற்பொழுது பொலிஸ் இராணுவம் என்று முப்படையையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். இவ்வாறான செயற்பாடு பாராளுமன்றம் இவ்வாறான செயற்பாட்டை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியாது. ஒன்றில் பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும் அல்லது இராணுவ புரட்சியை உருவாக்கி இந்த நாட்டை தன்வசப்படுத்த வேண்டும். ஆனால் இராணுவ புரட்சியை உருவாக்குவது என்பது சாத்தியப்படாததொன்று. முஸ்லீம் கட்சிகளுடைய ஆதரவின்றி ஜனாதிபதியாக தன்னை வென்று காட்டியது மட்டுமல்லாது சிறுபான்மையினரின் வாக்குகள் தேவையில்லை என்ற இறுமாப்புடனே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச செயற்படுகின்றார். இந்த நகர்வும் பாரிய தாக்கத்தை இனிவரும் காலங்களில் உருவாக்கும். சிங்கள பெரும்பான்மையினரின் வாக்கை வைத்து பாராளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெறுவேன் என்று நினைக்கின்றார். தமிழ் மக்களை பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கான அடிப்படை தீர்வு என்பது கொடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. தொடர்ச்சியான போராட்டங்கள் அல்லது ஆயுதம் ஏந்தி போராடிய போராளிகள் ஏன் ஆயுதம் ஏந்தி போராடினார்கள் என்ற வரலாறு கோட்டபாய ராஜபக்சவிற்கு தெரியாமல் இல்லை. அவ்வாறான ஒரு நிலைமை மாற்றப்படும் வரையில் அவர்களின் செயற்பாடு மாற்றப்படுமாக இருந்தால் இலங்கையில் பாரிய விளைவு ஒன்று ஏற்படும். ஆகவே கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தனது குரங்குப்பிடியினை மாற்ற வேண்டும். ஒரு ஜனநாயக ரீதியில் தனது அணுகு முறைகளை மேற்கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அதே சுதந்திரத்தை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு மனோநிலை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒரு மாற்றம் ஏற்படாதவிடத்து தமிழ் மக்களுக்கான உரிமைப்போராட்டம் புத்துயிர் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது எனலாம். தேர்தலில் சட்ட விதிமுறைகளுக்கமைய அதனுடைய அரசியல் நகர்வுகள் நகர்த்தப்பட வேண்டும். குறிப்பாக தேர்தலை தற்பொழுது வைக்க முடியாது என்று ஆணையாளர் கூறும் பொழுது அவரை மிரட்டும் பாணியில் நடவடிக்கைகள் அமையக்கூடாது. 1978ம் ஆண்டு அரசியலமைப்பானது அதற்கு முன்பிருந்த தேர்தல் தொகுதி முறைமைக்கும் தேர்தல் மாவட்டங்களுக்கும் அடிப்படை மாற்றமொன்றை அறிமுகம் செய்தது. முந்திய முறைமையானது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட, தனிப்பட்ட வேட்பாளர்களுடன் அல்லது சுயேட்சை வேட்பாளர்களுடன் தேர்தல் தொகுதிகளையும் கொண்டமைந்திருந்தது. குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டவராக அறிவிக்கப்பட்டார். எண் (7) என விபரிக்கப்படும் இம் முறையானது குறிப்பிட்ட 22 தேர்தல் மாவட்டங்களிலுமான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையாக மாற்றப்பட்டது.



அரசியலமைப்பின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் நிர்ணயம் தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்படுகிறது. மொத்தமாகக் குறித்த தேர்தல் மாவட்டங்களின் வாக்காளிப்பின் அடிப்படையில் 196 உறுப்பினர்கள் அனுப்பப்படுகின்றனர். அரசியலமைப்பின் 15 ஆவது திருத்தம் அறிமுகம் செய்த, 99 (அ) உறுப்புரை, குறிப்பிட்ட அரசியல் கட்சிகளால் அல்லது சுயேட்சை வேட்பாளர்களால் தேசிய மட்டத்தில் (தேசியப்பட்டியல்) பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு ஒரே தேர்தலிலேயே நாம் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் ஒரு விகிதாசார முறைமையைக் கொண்டிருக்கிறோம்.

அரசியலமைப்பின் 99(6)(அ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 1/20 க்கு (5%) குறைவான வாக்குகளைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழு தகுதியற்றதாக்கப்படும். எஞ்சிய செல்லுபடியான வாக்குகள், விகிதாசாரக் கணிப்பீட்டு அடிப்படையில் ஆசனங்களை ஒதுக்குவதற்காக, கணக்கில் எடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெறும் அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக்குழு மேலதிகமாக ஓர் உறுப்பினரைத் தெரிவு செய்யப்பட்டவராக அறிவிப்பதற்கான உரித்தையும் கொண்டுள்ளது (மேலதிக ஆசனம்). எஞ்சிய எண்ணிக்கையான ஆசனங்களுக்கு, அரசியற்கட்சியால் அல்லது சுயேட்சைக் குழுவால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் அடிப்படையில், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஒவ்வொரு அரசியற் கட்சியிலிருந்தும் அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்தும் உறுப்பினர்களை ஒதுக்கீடு செய்தல்

அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தம் அறிமுகம் செய்த விருப்பு வாக்குமுறைமையானது, ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்தும் அனுப்பப்பட வேண்டிய வேட்பாளர்களின் அடிப்படையைத் தீர்மானிக்கிறது. ஒவ்வொரு வாக்காளரும் அவரின் விருப்பத்தை அரசியல் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர் பட்டியலில் உள்ள வேட்பாளர்களுக்கு அளிக்க உரித்துடையவராவார். அத்தகைய மூன்று விருப்புகள் குறிப்பிடப்படலாம். தெரிவத்தாட்சி அலுவலரால் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், குறித்த வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்ட இலக்கத்தின் அடிப்படையில் இந்த மூன்று விருப்புக்களும் கூட்டிக் காட்டப்படலாம். ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவராக அறிவிக்கப்படும் குறித்த வேட்பாளரைத் தீர்மானிப்பதற்காக, வாக்குகளை எண்ணும் செயன்முறையின் இரண்டாம் கட்டமாக விருப்பு வாக்குகளை எண்ணுதல் இடம்பெறும்.

இவ்வாறான விதிமுறைகளை மாற்றியமைக்கும் செயற்பாடுகளையும் போலி வாக்குச்சீட்டுக்களை தயாரிக்கின்ற நடவடிக்கைகளிலும் மக்களை அச்சுறுத்தும் வகையிலும் இடம்பெறுகின்ற தேர்தல் செல்லுபடியற்ற ஒன்றாகவே அமையும் என்பதை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தருகின்ற தலைவர்களை சிங்கள தேசம் கொன்ற வரலாறும் இருக்கிறது. ஆனாலும் சர்வதேச மத்தியஸ்ததுடன் தமிழ் மக்களுக்கான வெற்றியை நிர்ணயிக்கும் வகையில் செயற்பட்டால் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வினை வடகிழக்கில் பெற்றுக்கொள்ளும் சூழல் உருவாகும். ஆகவே கோட்டபாய அவர்கள் தனது குரங்குப்பிடியில் இருந்து மதிநுட்பமாக விலகிக்கொள்வது அவசியம்.

இரணியன்




## விண்டோஸ் கணினிகளில் வட்ஸ் அப் மூலம் அழைப்புக்களை மேற்கொள்வது எப்படி?

உலகளவில் மிகவும் பிரபல்யமாகியுள்ள வட்ஸ் அப் ஆப்பிளிக்கேஷனை விண்டோஸ் கணினிகளில் பயன்படுத்தக்கூடிய வசதி ஏற்கணவே தரப்பட்டுள்ளது. எனினும் கோப்புக்களை பரிமாறல் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்புதல் போன்றவற்றினை மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

மொபைல் சாதனங்களின் ஊடாக மாத்திரமே வீடியோ மற்றும் குரல்வழி அழைப்புக்களை மேற்கொள்ள முடியும். எனினும் விண்டோஸ் கணினிகளிலும் வீடியோ மற்றும் குரல்வழி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான வழிமுறை ஒன்று உள்ளது.

இதற்கு மிகவும் நம்பிக்கையான Android Emulator மென்பொருளை முதலில் நிறுவ வேண்டும். கூகுளில் தேடி இவ்வாறான மென்பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அதன் பின்னர் குறித்த யுனெசழனை நுஅரடயவழச மென்பொருளை செயற்படச் செய்து அதன் ஊடாக பிந்தைய வட்ஸ் அப் பதிப்பிற்கான யீமு கோப்புக்களை தரவிறக்கம் செய்து நிறுவ வேண்டும்.அதன் பின்னர் மொபைல் இலக்கம் உட்பட அனைத்து அனுமதிகளையும் வழுங்கி வாட்ஸ் ஆப்பினை செயற்படுத்த வேண்டும்.

தற்போது வீடியோ அழைப்புக்கான வசதி தரப்பட்டிருப்பதை காணலாம். எச்சரிக்கை: Android Emulator மென்பொருட்கள் மூன்றாம் தரப்பு மென்பொருட்கள் ஆகும். எனவே கண்டிப்பாக நம்பிக்கையான மென்பொருளை தெரிந்தெடுத்து நிறுவ வேண்டும். Android Studio's emulator, ARChon, Bliss OS, Bluestacks போன்றன சில Android Emulator மென்பொருட்களாகும்.



## புத்தம் புதிய வசதி தரும் இன்ஸ்டாகிராம்

புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவிலான வீடியோக் கோப்புக்களை பகிரும் வசதியை இன்ஸ்டாகிரம் தருகின்றது. பேஸ்புக் நிறுவனத்தினார் நிர்வகிக்கப்பட்டுவரும்

இச் சேவையினை உலக அளவில் பல மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.


இவ்வாறான இன்ஸ்டாகிராமில் தற்போது பயனர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய புதிய வசதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது கருத்துரைகளை (Comments) ஒன்றன் பின் ஒன்றாக நீக்குவதற்கு பதிலாக பல கருத்துரைகளை ஒன்றாக நீக்கக்கூடிய வசதியே அதுவாகும்.

இது தவிர நிலை நிறுத்தப்பட்ட (Pin Comment) கருத்துரை வசதி வழங்குவது தொடர்பிலும் இன்ஸ்டாகிராம் பரிசீலித்துவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் பயனர் ஒருவர் யார் யார் தமது போஸ்ட்டில் தன்னை டேக் செய்யலாம் என்பதனையும் தெரிவு செய்யும் வசதியும் விரைவில் தரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Google Lens அப்பிளிக்கேஷனில் புத்தம் புதிய வசதி

கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட Google Lens அப்பிளிக்கேஷன் ஆனது புகைப்படங்களை அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.இந்த அப்பிளிக்கேஷனில் தற்போது மற்றுமொரு புதிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது கையால் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்ட வன்பிரதிகளை டிஜிட்டல் மாதிரியான மென்பிரதிக்குமாற்றக்கூடியதாக இருக்கின்றது.இதன் மூலம் வன்பிரதிகளை மென்பிரதிகளாக கணினியில் பயன்படுத்த முடியும்.




எனவே வன்பிரதிகளை மென்பிரதிகளாக்குவதற்கு தட்டச்சு செய்யவேண்டிய அவசியம் இல்லை.இவ் வசதியைப் பெற்றுக்கொள்வற்கு Google Lens அப்பிளிக்கேஷனை மொபைல் சாதனத்தில் செயற்படுத்த வேண்டும்.அதன் பின்னர் டிஜிட்டலாக மாற்றப்பட வேண்டிய கையெழுத்துப் பிரிதியை புகைப்படம் எடுக்க வேண்டும்.தொடர்ந்து நகல் செய்யப்பட வேண்டிய பகுதியை தெரிவு செய்து Copy to Computer என்பதை தெரிவு செய்யவும்.

இப்போது லேப்டொப் அல்லது டெக்ஸ்டொப் கணியில் குரோம் இணைய உலாவியில் லொக்கின் ஆகவும்.அங்கு Google Lens மூலம் நகல் செய்யப்பட்டதற்கான Notification பெறப்பட்டிருக்கும்.அதனைக் கிளிக் செய்து எழுத்துருக்களை நகல் செய்து விரும்பிய இடத்தில் பயன்படுத்த முடியும்.இங்கு Google Lens மற்றும் இணைய உலாவியில் ஒரே கூகுள் கணக்கினை பயன்படுத்த வேண்டும்.இவ் வசதியானது தற்போதுள்ள நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடக்குறிப்புக்களை டிஜிட்டல் முறையில் பகிர்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

## புத்தம் புதிய வடிவமைப்பில் பேஸ்புக்

முன்னணி சமூகவலைத்தளமாக பேஸ்புக் ஆனது பயனர்களை கவரும் வகையில் அவ்வப்போது பல மாற்றங்களை செய்துவருகின்றது.

இந்த வரிசையில் தற்போது இணைய உலாவியில் பயன்படுத்தப்படும் பேஸ்புக் வலைத்தளத்தின் வடிவமைப்பில் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. இது தொடர்பான தகவல் கடந்த F8 மாநாட்டில் வெளியிடப்பட்டிருந்த நிலையில் தற்போது நடைமுறைக்கு வருகின்றது.

இதன்படி அனைத்து வகையான வடிவமைப்புக்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், சில வசதிகளும் இடம் மாற்றப்பட்டுள்ளன. மேலும் இம் மாற்றமானது உலகிலுள்ள அனைத்து பேஸ்புக் பயனர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






**பூமியில் மனிதன் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதற்கு, மிகப் பெரிய சவாலாக இருப்பது வைரஸ்கள் தான்.**

ஜோஷீவா லெடர்பெர்க்,
நோபல் பரிசு வென்ற உயிரியலாளர்

# விளையாட்டு செய்திகள்



## இந்த அணி மட்டும் விளையாடா விட்டால் டெஸ்ட் கிரிக்கெட் வடிவமே இறந்துவிடும்: முன்னாள் ஜாம்பவான்

இந்திய அணி மட்டும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடாவிட்டால், அந்த வகை கிரிக்கெட் வடிவமே இறந்து விடும் என்று அவுஸ்திரேலிய அணி முன்னாள் நட்சத்திரம் கிரெக் சாப்பல் தெரிவித்தார்.

ஒருநாள், டி20 போட்டிகளின் வருகைக்குப் பிறகு ரசிகர்களிடம் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான வரவேற்பு குறைந்துகொண்டே வந்தது. இப்போது டி20, 100 பந்து போட்டி என கிரிக்கெட் டாப் கியரில் அடுத்த கட்டத்துக்கு மா-றிக் கொண்டு இருக்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்றும் முயற்சியாக ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் கடந்த ஆண்டு தொடங்கியது. இப்போது கொரோனா தொற்று பீதியால் அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் நட்சத்திரமுமான கிரெக் சாப்பல் சமூக ஊடகமொன்றில் அறக்கட்டளை ஒன்றுக்காக கலந்துரையாடிய போது கூறியதாவது: கிரிக்கெட் விளையாட்டின் உன்னதமான வடிவம் டெஸ்ட் போட்டிகள் தான். அதனை இந்தியா கைவிட்டால் டெஸ்ட் போட்டி வடிவமே இறந்து போய்விடும்.

இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைத் தவிர டெஸ்ட் போட்டியில் ஆர்வம் காட்டும் நாடுகள் இப்போது இல்லை. டெஸ்ட் போட்டிக்காக இளம் வீரர்களை உருவாக்குவதுமில்லை. வருங்காலங்களில் ஒரே நேரத்தில் 3, 4 வடிவங்களில் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு குறைவு. அதனால் டெஸ்ட் போட்டிதான் பாதிக்கும்.

இந்திய அணியின் கேப்டன் விராட் கோஹ்லிக்கு டெஸ்ட் போட்டியின் மீது இருக்கும் ஆர்வம், அன்பு டெஸ்ட் போட்டிகள் உயிர்ப்புடன் தொடரும் என்ற நம்பிக்கையை எனக்கு அளிக்கிறது. நான் டி20 போட்டிக்கு எதிரானவன் இல்லை. பொதுமக்களுக்கு எதையும் விற்பது எளிது.

ஆனால் சோதனை முயற்சிகளுக்கு பணப்பிரச்சனை பெரிதாக இருக்கும். ஆனால் இந்தியாவால் டெஸ்ட் போட்டிகள் உயிர்ப்புடன் தொடரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு கிரெக் சாப்பல் தெரிவித்தார்.

## கொரோனாவை விட மோசமானவர்...ஒரு கொடிய பாம்பு....சர்வானை சரமாரியாக திட்டிய கெய்ல்

கரிபீயன் பிரிமியர் லீக் (சி.பி.எல்.) 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஜமைக்கா தலவாஸ் அணிக்காக அந்த சீசனில் விளையாடி வந்த கிறிஸ் கெய்லை தக்கவைக்காமல் அந்த அணி நிர்வாகம் கழற்றிவிட்டதால் அணியின் ராம்நரேஷ் சர்வான் மீது குற்றச்சாட்டுகளை கெய்ல் தொடர்ச்சியாக அள்ளி வீசி வருகின்றார்.

இதுகுறித்து யு-டியூப் வீடியோ ஒன்றை கெய்ல் வெளியிட்டுள்ளார்.

அதில் 'ஜமைக்கா அணியில் இருந்து விடுவிக்கப்படுவது குறித்து என்னிடம் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. அந்த அணியின் பயிற்சியாளரும், வெஸ்ட் இண்டீஸ் முன்னாள் வீரருமான ராம்நரேஷ் சர்வான் தான் என்னை வெளியேற்றியதற்கு முக்கிய காரணம்.

அவர் "கொரோனாவை விட மோசமா-னவர். ஒரு கொடிய பாம்பு. பழிவாங்கும் குணம் கொண்டவர், நம்ப வைத்து முதுகில் குத்தி விட்டார். முதிர்ச்சியற்றவர் என்று சரமாரியாக திட்டி தீர்த்துள்ளார்".

இதற்கு சர்வான் "ஜமைக்கா அணியில் இருந்து கெய்ல் விடுவிக்கப்பட்ட முடிவில் எனக்கு துளியும் தொடர்பு கிடையாது. அது அணி நிர்வாகத்தின் முடிவு. கெய்ல் கூறிய குற்றச்சாட்டுகள் தவறானவை. அவர் தேவையில்லாமல் பலரது பெயருக்கு களங்கம் கற்பித்து விட்டார்" என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில் சர்வான் மீது பகிரங்கமாக குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிய 40 வயதான கெய்ல் மீது ஒழுங்கு நடவடிக்கை (போட்டியில் பங்கேற்க தடை அல்லது அபராதம்) பாயும் என்று தெரிகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.







## திறமையையும் பலத்தையும் அடையாளம் கண்டால் ரி–20 போட்டியில் வெற்றி காணலாம்: திமுத்

தம்மிடம் இருக்கும் திறமையையும், பலத்தையும் அடையாளம் கண்டால், ரி-20 போட்டிகளில் வெற்றிபெற முடியும் என ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ரி-20 உலக சம்பியனான இலங்கை அணி, இறுதியாக நடைபெற்ற மூன்று இருதரப்பு ரி-20 தொடர்களையும் இழந்து தரவரிசையில் 7ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ரி-20 போட்டிகளில் வெற்றிபெறுவதற்கு அணி என்ன செய்ய வேண்டுமென திமுத்திடம் வினவப்பட்டது. இதுகுறித்து அவர் கூறுகையில்,

'எமது வீரர்கள், பவர் ப்ளே ஓவர்களில் வேகமாக துடுப்பெடுத்தாட முயன்று விக்கெட்டுகளை பறிகொடுக்கிறோம். ஏனைய அணிகள் இரண்டு வீரர்களை மாத்திரமே வேகமாக ஓட்டங்களை எடுக்கும் வகையில் திட்டங்களை வகுத்துள்ளனர். அத்துடன், குறித்த வீரர்களும் களத்தடுப்பாளர்களுக்கு இடையில் பந்துகளை அடித்து ஓட்டங்களை பெற்றுக்கொடுக்கின்றனர். ஆனால், எமது வீரர்கள் களத்தடுப்பாளருக்கு மேல் பந்துகளை அடிக்க முயற்சிக்கிறனர்.

லசித் மாலிங்கவை தவிர்ந்த ஏனைய பந்துவீச்சாளர்கள் கடைசி ஓவர்களில் விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கு சிரமப்படுகின்றனர். அதுமாத்திரமின்றி ஒருநாள், டெஸ்ட் மற்றும் ரி-20 என அனைத்து போட்டிகளிலும் மத்திய ஓவர்களில் விக்கெட்டுகளை கைப்பற்றுவதற்கும் தடுமாறுகின்றோம். விக்கெட் எடுக்கும் திறமையை வளர்த்துக்கொண்டால், ரி-20 போட்டிகளில் வெற்றிபெற முடியும்.

எம்மிடம் இருக்கும் திறமையையும், பலத்தையும் அடையாளம் கண்டால், ரி-20 போட்டிகளில் வெற்றிபெற முடியும். நாம் இதற்கு முன்னரும் ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளோம். எனவே, ஏனைய அணிகள் எவ்வாறு விளையாடுகிறது என்பதை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, எமது அணிக்கு என ஒரு திட்டத்தை வகுத்து விளையாடினால், எம்மால் போட்டிகளில் வெற்றிபெற முடியும்' என கூறினார்.

# உலக செய்திகள்

## தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டாவிட்டாலும் இயல்பு நிலைக்கு திரும்புவோம்: ட்ரம்ப் பேச்சு!

தடுப்பூசி கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் அமெரிக்கர்கள் இயல்பு நிலைக்கு திரும்புவார்கள் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகை தோட்டத்தில் அன்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'கொரோனா வைரஸிற்கான தடுப்பூசியை இந்தாண்டு இறுதிக்குள் கண்டுபிடிப்பதை குறிக்கோளாக வைத்துள்ளோம். 14 முக்கிய ஆராய்ச்சியாளர்களோடு இந்தத் தடுப்பூசி கண்டறியும் திட்டம் தொடங்கப்படும். 'ஒப்ரேஷன் வோர்ப் ஸ்பீட்' என்பது இரண்டாம் உலகப்போரின் போது, உலகின் முதல் அணுஆயுதங்களை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் திட்டத்தை குறிப்பதாகும். மிகவும் பெரிதாக மற்றும் விரைவாக அமெரிக்காவில் இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு மிகப்பெரிய அறிவியல், தொழில்துறை மற்றும் தளபாட முயற்சி இது. தடுப்பூசியை சார்ந்துதான் அனைத்தும் இருக்கிறது என்று மக்கள் நினைக்க வேண்டாம். தடுப்பூசி இருந்தாலும், இல்லையென்றாலும் நாம் திரும்பி இயல்பு நிலைக்கு வருவோம். அதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்போகின்றன' என கூறினார்.



## பதவியை இராஜினாமா செய்தார் பிரேஸில் சுகாதாரத்துறை அமைச்சர்!

பிரேஸில் கடுமையான கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். பிரேஸில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்ற நிலையில், சுகாதாரத்துறை அமைச்சர் நெல்சன் டைக்கின் இந்த திடீர் தீர்மானம், அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) பரவல் கட்டுப்பாடுகளை கடுமையாக எதிர்க்கும் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ, அண்மையில் உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் முடி திருத்துமிடங்களை திறந்த நிலையில் இருக்கக்கூடிய அத்தியாவசிய சேவைகளாக அறிவித்தார். இதனை சுகாதாரத்துறை அமைச்சர் நெல்சன் டைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கும் அவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே அவர் தனது பதவியை இராஜினாமா செய்திருக்கக்கூடுமென உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் ராஜினாமா செய்ததற்கான காரணத்தை நெல்சன் டைக் தெரிவிக்கவில்லை. நெல்சன் டைக்கு முன்னாள் இருந்த அமைச்சர், ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவில் நீக்கப்பட்டு ஒருமாதத்திற்கு முன்னர் தான் நெல்சன் டைக் அமைச்சராக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அவுஸ்ரேலியாவின் பிரதான மாகாணத்தில் உணவு – தேனீர் விடுதிகள் திறப்பு!



அவுஸ்ரேலியாவின் பிரதான மாகாணங்களில் ஒன்றான நியூ சௌத்வேல்ஸ் மாகாணத்தில் உணவு விடுதிகள் மற்றும் தேனீர் விடுதிகள் ஆகியவை திறக்கப்பட்டுள்ளன. மாகாணத்தின் முதல்வர் க்ளாடி பெர்ஜிகிலான் கடந்த 10ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்புக்கு அமைய அன்று (வெள்ளிக்கிழமை) முதல் உணவு விடுதிகள் மற்றும் தேனீர் விடுதிகள் ஆகியவை திறக்கப்பட்டுள்ளன.

அதேபோல், உணவுகளுக்கு பப்களும் திறக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், மதுபான விடுதிகள் திறக்க அனுமதிக்கப்படவில்லை. தொற்று பரவல் தடுப்பு கட்டுப்பாட்டினை தளர்த்தும் ஒரு பகுதியாக, உணவு விடுதிகள் மற்றும் தேனீர் விடுதிகள் ஆகியன திறக்கப்பட்டாலும், சில விதிகள் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டுமென மாகாண அரசு தெரிவித்துள்ளது.

குறிப்பாக உணவு விடுதிகள் மற்றும் தேனீர் விடுதிகளில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் 10 பேருக்கு மட்டுமே அனுமதி, ஒரு மீற்றர் இடைவெளி, உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்திய நாடுகளில் ஒன்றான அவுஸ்ரேலியாவில், இதுவரை வைரஸ் தொற்றுக்கு 7,019பேர் பாதிக்கப்பட்டனர். இதில் 6,334 பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 587 சிகிச்சை பெற்று வருகின்றனர். 98பேர் உயிரிழந்துள்ளனர்.

## ரஷ்யாவில் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு சிகிச்சை!

ரஷ்யாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவதாக, ரஷ்யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது. இதன்மூலம், கொரோனா வைரஸ் தொற்றால் மிகப்பெரிய இழப்பை சந்தித்துள்ள அமெரிக்காவிற்கு அடுத்த நாடாக ரஷ்யா மாறியுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் (தற்போதைய நிலவரப்படி, 1,052,654பேர்) சிகிச்சை பெற்று வருகின்றனர். ரஷ்யாவில் 202,199பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன், கடந்த 24 மணித்தியாலத்தில் ரஷ்யாவில் 10,598பேர் வைரஸ் தொற்றுக்கு பாதிக்கப்பட்டுள்ளதோடு, 113பேர் உயிரிழந்துள்ளனர்.



ரஷ்யாவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பதிவான அதிகபட்ச தினசரி உயிரிழப்பு எண்ணிக்கை இதுவாகும். மேலும், வைரஸ் தொற்று பரவியதிலிருந்து 12 நாட்களாக ரஷ்யா 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட தினசரி பாதிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, ரஷ்யாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு மொத்தமாக 262,843பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, இதுவரையான காலப்பகுதியில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு மொத்தமாக 2,418பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் 2,300பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. மேலும், 58,226பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள ரஷ்யா, இன்னும் ஒரிரு தினங்களில் ஸ்பெயினை பின்தள்ளி, அதிகம் பாதிப்பை எதிர்கொண்ட இரண்டாவது நாடாக மாறும் என்பதை நம்பலாம்.

அழப்பிறந்த இனமடா எம்மினம் அப்போ அழு
தான் வாழ வேண்டும்.

கொலக்களத்தின் இறுதி கணங்களின் உச்சம்
உக்கிரம் உத்வேகம் என்பன அதிகரிக்க தமிழன்
பிணக்குவியலாய் விழுந்தான்.

கதறி கதறி இறுதி வன்னி மண்ணைவிட்டு
நகரஆயத்தமான நாள் இந்தநாள்
மூப்பது ஆண்டு காலம் கட்டிக்காத்த
வன்னிக்கோட்டையை அந்நியனிடம்
கைவிட்டுவிட்டு புறப்பட தயாரானோம்.

போராளிகள் முதல் மக்கள் வரை வன்னி
மண்ணை விட்டு பிரிகின்றோம் இனி எப்போ நாம்
நிம்மதியை காண்போம் என்ற ஏக்கம்.

யாரிடம் யார் சொல்லி அழுவது வன்னி மண்ணோ
கண்ணீரில் கழந்தது யார் கண்ணீர் யார்
துடைப்பார் எங்கும் மரண ஓலம்.

அழுவதற்கு பிறந்த இனம் எம்மினம் என அழுது
புலம்பினோம்.

எத்தனை கனவுகள் எத்தனை ஆசைகள்
எண்ணி எண்ணி கட்டிய மனக்கோட்டை
ஒரு நொடிப்பொழுதில் பஞ்சாய் மறந்தது
சுக்குநூறானது.

வேதனை யாரறிவார் சோதனை யார் புரிவார்
எம்மினம் அகதியாய் வாழப்பிறந்த இனமா .

நெஞ்சம் கனக்கிறது இந்த
பதிவை எழுதுகிறேன்
என் கண்கள் கலங்குகின்றது.






# கொரோனா COVID -19
# இலங்கையின் இன்றைய அறிக்கை

2020.05.17

| தொற்றாளர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 960 | 520 | 09 |
| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
| 4,720,196 | 1,811,674 | 313,220 |







இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.05.2020 அன்று வெளியிடப்பட்டது.